வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu



பாராளுமன்றத் தேர்தல் - 2024

தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தமிழ் அரசு கட்சி வெளியேறிய பின்னர்
தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்த பாராளுமன்ற தேர்தலில்
ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின்
சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்றது!

தருமலிங்கம் சித்தார்த்தன்
(முன்னாள் பாரளுமன்ற உறுப்பினர்)

5

யாழ் - கிளிநொச்சி மாவட்ட முதன்மை வேட்பாளர்

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 24.10.2024 வியாழக்கிழமை | இதழ் : 297 | பக்கங்கள் : 12

தாக்குதல் அச்சுறுத்தல்:

## அறுகம் குடாவுக்கு செல்ல வேண்டாம்!

### அமெரிக்கா, நியூசிலாந்து, பிரிட்டன் ரஷ்யா நாடுகள் பயண எச்சரிக்கை!

கொழும்பு, ஒக்ரோபர் 24

நாட்டின் பிரபல சுற்றுலா தளமான அறுகம்குடாவுக்கு செல்ல வேண்டாம் என்று தமது பிரஜைகளுக்கு அமெரிக்கா, பிரித்தானியா, நியூசிலாந்து, ரஷ்யா ஆகிய நாடுகள் பயண எச்சரிக்கை விடுத்துள்ளன.

அறுகம் குடாவில் உள்ள பிரபல சுற்றுலா இடங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தப்படும் என்று நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளதாலேயே அங்கு செல்ல வேண்டாம் என்று அந்த நாடுகள் பயண எச்சரிக்கை விடுத்துள்ளன.

அறுகம் குடா அலைச் சறுக்கு விளையாட்டுக்கு பிரபலமானது. இங்கு, இஸ்ரேலியர்கள் அதிகளவில் வருகை தருகின்றனர். இஸ்ரேல் - பலஸ்தீன போர்

11

## அறுகம் குடாவில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது!

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 24

அறுகம் குடாவில் பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு பணிகளில் 500 பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.



அத்துடன், புலனாய்வுப் பிரிவினரும் ஏனைய பாதுகாப்பு நிறுவனங்களும் பிரதேசத்தின் பாதுகாப்பை பலப்படுத்துவதில் கவனம் செலுத்தி வருகின்றனர்.

அறுகம்குடா, பொத்துவிலில்

11



## ஜோன்ஸ்டனுக்கு விளக்க மறியல்!

கொழும்பு, ஒக். 24

குற்றப் புலனாய்வு பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை விளக்க மறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பில்

11

## இஸ்ரேல் நாட்டவர்கள் வெளியேற வேண்டும்

### அந்நாட்டு பாதுகாப்பு பேரவை

கொழும்பு, ஒக். 24

இலங்கையின் அறுகம் குடா உட்பட தெற்கு மேற்கு கடற்கரை பகுதிகளில் இருந்து தனது பிரஜைகளை வெளியேறுமாறு இஸ்ரேலின் தேசிய பாதுகாப்பு பேரவை கேட்டுள்ளது.

அத்துடன், அவ்வாறு வெளியேறியவர்கள் இலங்கையிலிருந்து வெளியேறவேண்டும் அல்லது தலைநகருக்கு செல்ல வேண்டும் என்றும் பேரவை தெரிவித்துள்ளது.

11

## தேசிய மக்கள் சக்தியின் வெற்றியால் வட, கிழக்கு மக்களிடையே எதிர்பார்ப்பு



### ஜனாதிபதி அநுரகுமார

திருமலை, ஒக். 24

தேசிய மக்கள் சக்தியின் வெற்றி வடக்கு, கிழக்கு மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை தோற்றுவித்துள்ளது என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று நடந்த பொதுக்கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஊழல்வாதிகள், கொலையாளிகள் உள்ளிட்ட பலர் பாராளுமன்றத்தில்

11

## அரச ஊழியர் சம்பள உயர்வை நடைமுறைப்படுத்த வேண்டும்!

### ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை

கொழும்பு, ஒக். 24

அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு நிதியமைச்சர் என்ற ரீதியில் தாம் எடுத்த அமைச்சரவை தீர்மானத்தை உடனடியாக தற்போதைய அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றிருந்தால் எதிர்வரும் ஜனவரி முதல் சம்பள அதிகரிப்பை வழங்க நாம் திட்டமிட்டிருந்தோம். சம்பள அதிகரிப்பு வழங்கப்படாவிட்டால், அதற்காக ஒதுக்கப்பட்ட நிதியானது எமது அரசாங்கத்தால்

11

## ஜனநாயக தேசிய கூட்டணியின் வேட்புமனுவை ஏற்குமாறு பணிப்பு

கொழும்பு, ஒக். 24

எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்காக வன்னித் தேர்தல் மாவட்டத்தில் ஜனநாயக தேசிய கூட்டணி தாக்கல் செய்த வேட்புமனுவை நிராகரிப்பதற்கு மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி மேற்கொண்ட தீர்மானத்தை வலுவற்றதாக்கி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதன்படி, ஜனநாயக தேசிய கூட்டணியின்

11



## அமெரிக்க தூதுவர் ஜூலி யாழ்ப்பாணம் வந்தார்!

யாழ்ப்பாணம், ஒக். 24

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார். இதன்போது, பல இடங்களுக்கு சென்ற அவர் பல தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடினார்.

"அமெரிக்க - இலங்கை கூட்டாண்மைகளை முன்னிலைப்படுத்தி சாதகமான தாக்கத்தை ஏற்படுத்த வடக்கில் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா ஆகிய பகுதிகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ளேன்.

"வடக்கு மற்றும் தெற்கில் உள்ள

11

## தரமற்ற மருந்து பாவனை; 150 பேர் பார்வை இழந்தனர்!

### சிவில் உரிமைகள் மருத்துவர் சங்கம்

கொழும்பு, ஒக். 24

நாட்டில் தரமற்ற மருந்து பாவனையால் 150 பேர் பார்வை இழந்துள்ளனர் என்று சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் கவனவீனம் காரணமாக பார்வை இழந்த சிலர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்றைய தினம் முறைப்பாடுகளை பதிவு செய்தனர். இதன்போது, கருத்து வெளியிட்ட மருத்துவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

எந்தவித ஆய்வுகளும் மேற்கொள்ளப்படாமல் கடந்த அரசாங்கத்தால் தரமற்ற மருந்துகள்

11

## நாய் குறுக்கே வந்ததால் விபத்து முல்லைத்தீவு இளைஞர் மரணம்

யாழ்ப்பாணம், ஒக். 24

நாய் குறுக்கே பாய்ந்ததால் ஏற்பட்ட விபத்தில் படுகாயமடைந்த முல்லைத்தீவு இளைஞர் யாழ். போதனா மருத்துவமனையில் உயிரிழந்தார்.

கடந்த 20ஆம் திகதி முல்லைத்தீவு - வெலிஓயா பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதில் படுகாயமடைந்த இளைஞர் முல்லைத்தீவு பொது மருத் துவமனையில் சேர்க்கப்பட்டார்.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் நடக்கிறது

தமிழக முதல்வராக செல்வி ஜெயலலிதா முதல் தடவையாக பதவியிலிருந்து, அடுத்த தேர்தலில் கருணாநிதி ஆட்சிக்கு வந்ததும் ஜெயலலிதாமீது ஊழல் புகார். வருமானத்துக்கு அதிகமாக சொத்துச் சேர்த்தாரென புகார்கள் கிளப்பப்பட்டன.

அதற்குக் காரணம் வேறு ஒன்றுமல்ல, அவர் ஊழல் செய்ததை பகிரங்கமாக செய்ததுதான்.

அந்த ஐந்து ஆண்டுகளில் அவர் சேர்த்த சொத்துகளைவிட அதிக சொத்துகளை கருணாநிதிதான் முதல்வராக இருந்தபோது சேர்த்திருந்தாலும் அவர் தனது மருமகன் முரசொலி மாறனை வைத்து ஒரு "தேர்ச்சி பெற்ற ஊழல்வாதிபோல" அவற்றைக் கண்டுபிடிக்க முடியாத வகையில் ஊழல் செய்து சொத்துச் சேர்த்திருந்தார். ஆனால், ஜெயலலிதாவோ முன் அனுபவமில்லாததால், செய்ததை மற்றவர்கள் கண்டுபிடிக்கும் வகையில் செய்தார். அதனால்தான் அவர் செய்த ஊழல்கள் பேசுபொருளாகின.

அதுபோலத்தான், நமது அரசியல்வாதிகளில் சிலரும் தாம் செய்த சில விடயங்களுக்கு தடயங்களை விட்டுவைத்துவிட்டு மாட்டிக் கொண்டு முழிக்கின்றனர்.

விக்னேஸ்வரன் ஐயா, ஒருவருக்கு மதுபான விற்பனை சாலைக்கு அனுமதி பெற்றுக் கொடுப்பதற்காக சிபார்சுக் கடிதம் கொடுத்து மாட்டிக் கொண்டிருக்கிறார்.

ஆனால், அவ்வாறு மதுபான சாலைகளுக்கு அனுமதி பெற்றுக் கொடுத்த பலர் எதுவித சலனமும் இல்லாமல் இருக்கின்றனர். அதற்காக அவர்கள் அதுபோன்ற மதுபான சாலைகளுக்கு அனுமதி பெறவில்லை என்பதல்ல, எந்த ஆதாரமும் இல்லாமல் செய்திருக்கிறார்கள். அவர்கள் பெயரிலோ அல்லது அவர்கள் குடும்பத்தினர் பெயரிலோ இருந்தால் தானே நீங்கள் கண்டுபிடிப்பதற்கு.

ஒரு பாராளுமன்ற உறுப்பினர், தனது பாதுகாப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஒருவரின் உறவினர் பெயரிலும் எடுத்திருக்கிறார். அதற்காக அவர் எந்த சிபார்சு கடிதத்தையும் கொடுக்கவில்லை. நேரடியாக லைசன்ஸ் பெறுபவரின் விண்ணப்பத்துடன், அவரையும் அழைத்துக் கொண்டு மதுவரித் திணைக்களத்துக்கு சென்று, ஆணையாளர் நாயகத்தை சந்தித்து பெற்றுக் கொடுத்திருக்கிறார்.

இங்கே அவர் அதில் சம்பந்தப்பட்டமை அந்த ஆணையாளர் நாயகத்துக்கு மாத்திரமே தெரிந்த சங்கதி. எங்கும் அவர் சம்பந்தப் பட்ட விபரம் இல்லை. அதனால் அவர் மற்றையவர்களின் விபரங்களை வெளியிடவேண்டும் என்று வலியுறுத்திக் கொண்டிருக்கின்றார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் எனக்குத் தெரிந்த எம். பி. ஒருவர் போன் பண்ணிக் கேட்டார், "உங்களுக்கு ஏதாவது வீதி திருத்த வேண்டி இல்லையா?" என்று.

அப்படியொரு தேவையும் எனக்கு இல்லாதபோதும் வருவதை எதற்கு விடுவது என்று நண்பர் ஒருவரின் வீடு இருக்கும் சின்ன ஒழுங்கை ஒன்றை செப் பனிடுவோமே என்று, நண்பரிடம் கேட்டு, அவர் வீதியின் பெயரை அந்த எம். பியிடம் கொடுத்து அதனை செப்பனிட்டது இப்போது ஞாபகத்துக்கு வந்தது.

எனக்கு ஓர் எம். பியை தெரிந்திருந்ததால் நண்பர் ஒருவரின் வீடு இருந்த வீதியை செப்பனிட முடிந்தது. அதற்காக எல்லா வீதிகளும் செப்பனிடப்படவில்லையே.

இதுபோல, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எம். பிக்களுக்கு மதுபானசாலைகள் திறப்பதற்கு அனுமதி கொடுக்கிறார் என்றால், அந்த வியாபாரத்தில் ஈடுபட விரும்புகின்ற ஒருவருக்கு அதற் கான அனுமதியை ஓர் எம். பி. எடுத்துக்கொடுப்பதில் என்ன தவறு இருக்கின்றது என்பதுதான் புரியவில்லை.

இதில் கவனிக்கவேண்டியது, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்தபோது அவருக்கு ஆதரவு வழங்குமாறு கேட்டே அவர் இது போன்ற சலுகையை வழங்கியிருக்கலாம். ஆனால், நமது எம். பிக்களில் சார்ள்ஸ் நிர்மலநாதனும் வினோநோகராத லிங்கமும் மாத்திரமே ரணிலை பகிரங்கமாக ஆதரித்தவர்கள். ஏனையவர்கள் பொது வேட்பாளரையோ அல்லது சஜித் பிரேமதாஸவையோதான் ஆதரித்தார்கள். அப்படியெனில், ரணில் எதற்காக இந்த மதுபானசாலை அனுமதிகளை இவர்களுக்கு வழங்கியிருக்க வேண்டும்? என்ற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

ரணிலுக்கு ஆதரவு வழங்கியவர்கள் டக்ளஸ் தேவானந்தாவும் அங்கஜன் இராமநாதனும் கிழக்கில் பிள்ளையானும் வியாழேந்திரனும் தான். தனக்கு ஆதரவு வழங்குகிறார்கள் என்பதற்காக அவர்களுக்கு வழங்கியிருந்தால், அது இலஞ்சம் என்று கருதலாம். ஆனால், வடக்கில் தனக்கு ஆதரவு வழங்காதவர்களுக்கும் அவர் அனுமதிப் பத்திரத்தை வழங்கினார் என்றால், அது எந்த வகைப்பட்டது என்பது தெரியவில்லை.

ஏற்கனவே, ஒரு தடவை இந்தப் பத்தியிலும் எழுதியிருந்தேன். இரண்டாயிரத்து பதினைந்து வரை எம். பிக்களுக்கு கார்களை இறக்குமதி செய்வதற்காக தீர்வையற்ற 'பெர்மிற்'கள் வழங்கப்படுவதுண்டு. அது அவர்கள் கார்களை வாங்கி தமது மாவட்டத்தில் மக்கள் பணியாற்றுவதற்காக ஓடித் திரிவதற்காகத்தான். கார்கள் மாத் திரமல்ல. பின்னர் அவர்கள் ஓடி ஓடி பணியாற்றுவதற்காக எரிபொருளுக்கும் பணம் வழங்கப்படுவதுண்டு.

ஆனால், நமது எம். பிக்கள் அனைவரும் தமக்குக் கிடைக்கும் 'பெர்மிற்' றை யாராவது ஒருவருக் குக் கொடுத்து இரண்டு கோடி முதல் மூன்று கோடி ரூபாய் வரை இலாபம் பார்த்து விடுகின்றனர். அப்போதெல்லாம் அது பற்றிக் கண்டுகொள்ளாத நாம். இப்போது அவர்கள் 'பார் பெர்மிற்' எடுத்து விட்டார்கள் என்று குத்திமுறிவது எதற்காக என்பதுதான் புரிய வில்லை.

இதோ யார் யார் எல்லாம் 'பார் லைசன்ஸ்' பெற்றார்கள் என்ற விப ரம் கிடைத்துவிட்டது. தேர்தல் பிரசாரத்தின் இறுதி நாட்களில் விபரம் வெளியிடப்படுகின்றது என்று அவரவருக்கு பூச்சாண்டி காட்டிக் கொண்டிருக்கின்றார்கள். இவையெல்லாம் மக்களுக்கு ஒரு பொருட்டாகவே இருக்கப் போவதில்லை.

ஆனாலும் ஜெயலலிதா ஊழல் செய்ததுபோல ஆதாரங்களை வைத்துக்கொண்டு ஊழல் செய்தவர்கள்தான் அச்சமடையவேண்டும். அதாவது, அந்த லைசன்ஸை பெற்றுக் கொடுப்பதற்காக பல கோடிகளை வாங்கியவர்கள், அதற்காக சட்டத்தரணியை வைத்து ஒப்பந்தம் செய்தவர்கள்தான் பாவம்.

ஆனால், அப்படி இல்லாமல் யாருக்காவது உதவியாக மதுபான சாலைகளுக்கு அனுமதி பெற்றுக் கொடுத்திருந்தால், அவர்கள் நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு இருக்கலாம்தான்.

- ஊர்க்குருவி.

# 840 போதை மாத்திரைகளுடன் சுன்னாகத்தில் இளைஞர் கைது!



யாழ்ப்பாணம், ஒக். 24

840 போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவரை சுன்னாகத்தில் கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட சூரிய பண்டார தலைமையில் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இந்த நபர் கைது செய்யப்பட்டார்.

கைதானவர் ஏழாலை கிழக்கை சேர்ந்தவர் என்று தெரிய வருகின்றது. கைது செய்யப்பட்ட நபர் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். எவ். எம். பெடோஸிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அவரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கைதானவர் முன்னரும் போதை மாத்திரையுடன் கைதாகி அவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு ஒன்றும் நிலுவையில் உள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-01-05)

# யாழில் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு பேரணி இன்று!

யாழ்ப்பாணம், ஒக். 24

மார்பக புற்றுநோய் தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் முகமாக பேரணியொன்று இன்று வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் இந்தப் பேரணி யாழ்ப்பாணம் பொது நூலகம் முன்பாக ஆரம்பமாகி யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் நிறைவடையும்.

பேரணியின் நிறைவில் யாழ்ப்பாணம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கருத்தமர்வு ஒன்றும் நடைபெறவுள்ளது.

இந்தப் பேரணி மற்றும் கருத்தமர்வில் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினர், யாழ். மாநகர அதிகாரி பிரிவினர், யாழ். பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், லயன்ஸ் கழகத்தினர், தாய்மார் கழக அன்னையர்கள் எனப் பலரும் பங்கேற்கவுள்ளனர். (ஐ)

## வருடாந்த ஒன்றுகூடல்

கிளிநொச்சி, ஒக். 24

கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலயத்தின் வருடாந்த ஒன்றுகூடல் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை பொது மண்டபத்தில் பாடசாலை அதிபர் ப. ஆனந்தராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மல்லாவி மத்திய கல்லூரி பிரதி அதிபர் க. அருளானந்தகுமார் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ)

## கடையிற் சுவாமிகள் குருபூசை

யாழ்ப்பாணம், ஒக். 24

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவசிறீ பால. திருகுணானந்த குருக்கள் நடத்தும் வாராந்த திருவாசக சிறப்புச் சொற்பொழிவும் மாதந்தோறும் ஈழத்து சித்தர்கள் குருபூசையும் தொடர் 06 கடையிற் சுவாமிகள் குருபூஜை விழா பன்னாலை சிவபூதவராயர் ஆலய பிரதான மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் கலந்து கொள்வார்.

கடையிற் சுவாமிகள் குருபூசையைத் தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகள், "வணங்க வேண்டிய கடையிற் சுவாமிகள்", என்ற தலைப்பில் சைவப் புலவர் பொன். சந்திரவேலின் பிரசங்கம், ஆன்மிகவிருத்தினர் உரை என்பன நடைபெறும்.

இறுதி நிகழ்வாக குருபூசையை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஐ)

## வாசிப்பு மாத இறுதி நிகழ்வும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஒக். 24

வலி. கிழக்கு பிரதேச சபை உரும்பிராய் பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத இறுதி நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளன.

உரும்பிராய் கற்பக விநாயகர் மணி மண்டபத்தில் உரும்பிராய் உப அலுவலக பொறுப்பதிகாரி இ. சிவரூபன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் இரத்தினகுமார் குபேசன் பிரதம விருந்தினராகவும் உரும்பிராய் மேம்பாட்டு ஒன்றிய தலைவர் டாக்டர் வே. கணேசவேள், ஊரெழு கணேசா வித்தியாசாலை அதிபர் இரா. ஜெயக்குமார், உரும்பிராய் தெற்கு கிராம சேவையாளர் செ. வசந்தகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

## தந்தை செல்வா ஜெயந்தி தினத்தில் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக். 24

இலங்கை தமிழ் மக்களின் தேசபிதா தந்தை செல்வாவின் 125ஆவது ஜெயந்தி தினத்தை முன்னிட்டு ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய நூல் வெளியிடப்படவுள்ளது.

"எஸ். ஜே. வி. செல்வநாயகமும் தமிழ்த் தேசிய வாதமும்" என்ற இந்த நூல் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு தந்தை செல்வா கலையரங்கில் வெளியிடப்படவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி பங்கேற்கவுள்ளார்.

செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் வெளியாகும் இந்த நூலின் ஆசிரியர்களாக பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் ச. விஜயசந்திரன், விரிவுரையாளர் கலாநிதி மாலினி பாலமயூரன் ஆகியோர் செயல்பட்டனர். இந்த நூலில் 17 கட்டுரைகள் தமிழ், ஆங்கிலத்தில் ஆக்கம் செய்யப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
24.10.2024 வியாழக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 07

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஜனாதிபதி அநுர குமாரவும் எதிரணியும்

"பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிக்கு எந்தத் தேவையும் இல்லை. அரசியல் எதிரணி ஒழிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டியதே எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் வாக்காளர்களின் பொறுப்பு. இன்று நாட்டுக்கு தேவைப்படுவது பலம் பொருந்திய அரசாங்கம் ஒன்றே தவிர, எதிர்க்கட்சி அல்ல. அதனால் அடுத்த பாராளுமன்றத்தை தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகளால் மக்கள் நிரப்பவேண்டும்.

"ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளின் விளைவாக முன்னைய பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தவர்களில் சுமார் 60 அரசியல்வாதிகள் வெளிப்படையாக எல்லோருக்கும் தெரிந்த காரணங்களுக்காக பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கிக் கொண்டார்கள். எஞ்சியிருக்கும் ஊழல்வாதிகளையும் எதிரணி அரசியல் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் புதியவர்களையும் தேர்தலில் தோற்கடிப்பதன் மூலம் பாராளுமன்றத்தை துப்புரவாக்கும் பணியை வாக்காளர்கள் நிறைவு செய்ய வேண்டும்."

இலங்கையில் கூடுதலான பாராளுமன்ற ஆசனங்களைக் கொண்ட மாவட்டங்களில் ஒன்றான கம்பஹாவில் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்றத் தேர்தல் பிரசாரத்தை தொடக்கி வைத்து கடந்த ஞாயிறன்று கட்டுநாயக்காவில் பேரணி ஒன்றில் உரையாற்றிய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவும் அவரின் வலதுகை அமைச்சர் விஜித ஹேரத்தும் தெரிவித்தனரென கொழும்பு பத்திரிகைகளில் வெளியான கருத்துகள் இவை. தங்களின் உரைகளை மக்களை தவறாக வழிநடத்தும் நோக்கில் அந்தப் பத்திரிகைகள் திரிபுபடுத்தி செய்திகளை வெளியிட்டன என்று இந்த ஆசிரிய தலையங்கத்தை எழுதிக்கொண்டிருந்த தருணம் வரை அவர்கள் இருவரிடமும் இருந்து எந்த மறுப்பும் வந்ததாக இல்லை.

புதிய ஜனாதிபதியாக திஸநாயக்கவை தெரிவு செய்ததன் மூலம் மக்கள் பாரம்பரியமான 'பிரதான' அரசியல் கட்சிகளையும் அவற்றின் தலைவர்களையும் நிராகரித்திருப்பதுடன் மாற்றத்தைக் கொண்டு வரக்கூடிய ஒரு தலைவராக அவர் மீதான நம்பிக்கையையும் வெளிப்படுத்தினார்கள். பழைய கட்சிகளின் இதுகாலவரையான தவறான ஆட்சி முறையையும் ஊழல் முறைகேடுகளையும் அதிகார துஷ்பிரயோகங்களையும் இனிமேலும் பொறுத்துக்கொள்ளத் தயாரில்லை என்பதை உலகுக்கு மக்கள் தெளிவாக வெளிக் காட்டியிருக்கிறார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் நிராகரித்த கட்சிகள் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றன. ஆனால், மக்கள் முன்னிலையில் உருப்படியான கொள்கைகளையோ, வேலைத் திட்டங்களையோ அவை முன்வைக்கவில்லை. மக்களிடம் எதைக் கூறுவது என்று தெரியாமல் அவை தடுமாறுகின்றன. புதிய அரசாங்கத்தின் மீது தவறு கண்டுபிடிக்க அவை "முட்டையில்...... பிடுங்குகின்றன." அவற்றை எவ்வாறு கையாளுவது என்பது மக்களைப் பொறுத்த விடயம்.

ஊழல்தனமான அரசியல் கலாசாரத்தை கட்டி வளர்த்தவர்களை ஜனநாயக தேர்தல் செயன்முறைகளின் மூலமாக நிராகரிப்பதற்கு முன்னதாக வீதிகளில் இறங்கி கிளர்ச்சி செய்வதன் மூலமாகவும் அதிகாரத்தில் இருந்து தங்களால் விரட்ட முடியும் என்று நிரூபித்தவர்கள் இலங்கை மக்கள். அதேவேளை இரு வருடங்களுக்கு முன்னர் இலங்கை வரலாற்றில் முன்னென்றும் இல்லாத வகையிலான கிளர்ச்சிக்கு பிறகு தங்களது வாக்குரிமையை பயன்படுத்துவதற்கு கிடைத்த முதல் வாய்ப்பைப் பயன்படுத்தி முன்னென்றும் இல்லாத வகையிலான அமைதியான தேர்தலில் சுமுகமான அதிகார மாற்றத்தையும் உறுதி செய்தவர்கள் அவர்கள்.

இதேவேளை, அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக மூன்று தசாப்த கால இடைவெளியில் இரு ஆயுதக் கிளர்ச்சிகளை முன்னெடுத்து தோல்வி கண்ட ஜனதா விமுக்தி பெரமுனவின்( ஜே. வி. பி.) வன்முறை கடந்த காலத்துக்கு அதை நெடுகவும் பணயக் கைதியாக வைத்திருக்காமல் அதன் தலைமையிலான தேசிய மக்கள் சக்தியை மக்கள் ஜனநாயக வழிமுறைகளின் மூலம் ஆட்சியதிகாரத்துக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். நம்பகத்தன்மையான ஒரு ஜனநாயக அரசியல் இயக்கமாக தேசிய மக்கள் சக்தியை நோக்கியதன் விளைவாகவே இன்று அதன் தலைவரான திஸநாயக்கவை மக்கள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக்கி இருக்கிறார்கள்.

பலம் பொருந்திய அரசாங்கம் ஒன்று மாத்திரமே இன்றைய தேவை என்றும் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிக்கு எந்தத் தேவையும் இல்லை எனவும் ஜனாதிபதியினதும் அமைச்சர் ஹேரத்தினதும் கருத்துகள் ஜனநாயக அரசியல் மீதான அவர்களின் பற்றுறுதி மீது மக்களுக்கு நிச்சயம் சந்தேகத்தை ஏற்படுத்தும்.

பாராளுமன்றத்தை துப்புரவு செய்வது என்பது பழைய ஊழல்தனமான அரசியல் வர்க்கத்தவர்களை ஜனநாயக ரீதியாக தோற்கடித்து வீட்டுக்கு அனுப்புவது என்று மாத்திரம் அமைய வேண்டுமே தவிர, பாராளுமன்றத்தில் எதிரணியே இருக்கத் தேவையில்லை என்று ஒருபோதும் ஆகிவிடாது. ஊழலற்ற அரசாங்க நிருவாகத்தை உறுதிசெய்வதற்கு பாராளுமன்றத்துக்கு புதியவர்களை தெரிவு செய்வதைப் போன்று அரசாங்கத்தின் தவறுகளையும் இடம்பெறக்கூடிய அதிகார மீறல்களையும் தட்டிக் கேட்க புதியவர்களைக் கொண்ட எதிரணியும் வேண்டும். அதுவும் இன்று நாட்டுக்கு அவசியமாக தேவைப்படுகிறது.

## வடக்கு ஆளுநருடன் ஜூலி சங் சந்திப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 24

யாழ்ப்பாணம் வந்த அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனை நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

வடக்கு மாகாண அபிவிருத்தி செயல்பாடுகள், கல்வி, சுற்றுலாத்துறை, காணி விடுவிப்பு, போக்குவரத்து வசதிகள், தொழில் வாய்ப்புகள், முதலீட்டு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது.

இந்த சந்திப்பில் அமெரிக்கத் தூதுவர், வடக்கில் காணி விடுவிப்பு தொடர்பான விவரங்களை ஆளுநரிடம் கேட்டறிந்து கொண்டார்.

ஜனாதிபதியின் வழிகாட்டுதல்களுக்கு அமைய காணி விடுவிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளன - என்று ஆளுநர் இதன்





போது தெரியப்படுத்தினார். மேலும், வடக்கு மாகாணத்தில் காணி சம்பந்தப்பட்ட பிணக்குகள் சட்டவிரோத காணி ஆக்கிரமிப்புகள் தொடர்பிலேயே அதிகம் காணப்படுகின்றன. அவற்றை தீர்ப்பதற்கு தற்போதுள்ள அரசாங்கத்துடன் கலந்தாலோசித்து சாதகமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றும் கூறினார்

அத்துடன், வடக்கில் காணப்படும் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்புகளை பெற்றுக் கொள்வதற்கான செயல்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அமெரிக்க தூதுவரிடம் கேட்டுக் கொண்டார்.

இதற்கு பதிலளித்த அமெரிக்கத் தூதுவர், வடக்கு மாகாண அபிவிருத்திக்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்க தயாராக உள்ளார் என்றும் இதற்கு ஆளுநரின் ஒத்துழைப்பையும் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். (ஐ -05)

## இளம் வேட்பாளர் திடீர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக். 24

எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் இளம் வேட்பாளர் ஒருவர் திடீர் சுகயீனம் காரணமாக உயிரிழந்தார்.

முன்னாள் எம். பி., இ. அங்கஜன் தலைமையிலான ஜனநாயக தேசியக் கூட்டணியில் போட்டியிடும், வல்வெட்டித்துறை நகர சபை முன்னாள் உறுப்பினரான செந்திவேல் தமிழினியன் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

திடீர் சுகயீனம் காரணமாக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையிலேயே அவர் உயிரிழந்தார்.

(ஐ-02-05)

## இதழ் வெளியீடும் பரிசளிப்பு விழாவும்

கிளிநொச்சி, ஒக். 24

இரணைதீவு பொது நூலகம் தேசிய வாசிப்பு (ஒக்ரோபர்) மாதத்தை முன்னிட்டு நடத்தும் முத்தொளி இதழ் - 4 வெளியீடும் பரிசளிப்பு விழாவும் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளன.


இரணைதீவு பொது நூலகத்தில் இரணைதீவு உப அலுவலக பொறுப்பதிகாரி ற. தட்சயன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முழங்காவில் ஆதார மருத்துவமனை மருத்துவ அத்தியட்சகர் மருத்துவர் ஓ. பி. பெஞ்சமின், சிறப்பு விருந்தினர்களாக இரணைதீவு றோ. க. த. க. வித்தியாலயத்தின் ஓய்வு பெற்ற பிரதி அதிபர் திருமதி பிறேமாவதி குகனேஸ்வரன், இரணைதீவு றோ. க. த. க. வித்தியாலயத்தின் ஓய்வு பெற்ற உபஅதிபர் திருமதி வசந்தி நாகராசா, பூநகரி பிரதேச சபை சனசமூக நிலைய உத்தியோகத்தர் அ. சசிகுமார், ச. மதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

## வாசகர்களின் கவனத்துக்கு!

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (ஒக்ரோபர் 22, 2024) "ஜெய்சங்கர் கூறியது என்ன?" என்ற தலைப்பிலான எமது ஆசிரிய தலையங்கத்தில் தமிழ்நாட்டை சேர்ந்த ஏ.பி. வெங்கடேஸ்வரன் இலங்கைக்கு இந்திய அமைதி காக்கும் படைகளை அனுப்புவதற்கு பிரதமர் ராஜீவ் காந்தியின் அரசாங்கம் தீர்மானித்த நேரத்தில் இந்திய வெளியுறவு செயலாளராக பதவி வகித்தாரெனக் கூறப்பட்டிருப்பது தவறாகும். ராஜீவ் காந்தியுடன் முரண்பாடு காரணமாக வெங்கடேஸ்வரன் 1987 ஜனவரியிலேயே வெளியுறவு செயலாளர் பதவியில் இருந்து விலகிவிட்டார்.

"இலங்கைக்கு செல்கின்ற இந்திய படைகள் அங்கிருந்து திரும்பும்போது முன்னர் நிலவியதை விடவும் மிகவும் மோசமான நிலையிலேயே அந்த நாட்டை விட்டுவிட்டு வரும்" என்று இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கை 1987 ஜூலை 29 கைச்சாத்திடப்பட்ட பிறகு சென்னை இந்து ஆங்கில பத்திரிகையில் எழுதிய கட்டுரை ஒன்றிலேயே வெங்கடேஸ்வரன் குறிப்பிட்டிருந்தார். வெளியுறவு செயலாளராக பதவியில் இருந்துகொண்டு அவர் அவ்வாறு எழுதவில்லை என்பதை வாசகர்களின் கவனத்துக்குக் கொண்டுவருகிறோம். (ஆ-ர்)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள் உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் அடைவீர்கள். உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும்.

**இடபம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புதிய அத்தியாயம் தொடங்கும் நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பல வேலைகளையும் இழுத்துப்போட்டு பார்க்க வேண்டி வரும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். சகிப்புத்தன்மை தேவைப்படும் நாள்.

**கடகம்**
குடும்பத்தை பற்றிய கவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் பாக்கிகளை போராடி வசூலிப்பீர்கள். உத்தியோகத்தில் சோர்வு வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**சிம்மம்**
ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் நினைத்ததை முடிப்பீர்கள்.

**கன்னி**
எதையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். வியாபாரத்தில் வாழ்க்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். முயற்சியால் முன்னேறும் நாள்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் அந்நோன்யம் உண்டு. திடீர் பணவரவு உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார். வியாபாரத்தில் புதிய யுக்திகளை கையாண்ட வியாபாரத்தை பெருக்குவீர்கள்.

**விருச்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான வேலைகளை எல்லாம் கையில் எடுத்து கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் வளைந்து கொடுத்துப் போவது நல்லது. புதிய முயற்சிகள் பலிதமாகும்.

**தனுசு**
பிள்ளைகள் உங்கள் அருமையைப் புரிந்துக் கொள்வார்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள்.

**மகரம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள் நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். அமோகமான நாள்.

**கும்பம்**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக்கொள்வீர்கள். உத்தியோகத்தில் எல்லோரும் மதிப்பார்கள். புதுமை படைக்கும் நாள்.

**மீனம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

# முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் வெள்ளிவிழா நிகழ்வுகள் சனியன்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஒக். 24
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவு நாள் நிகழ்வுகள் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் முகாமைத்துவக்கற்கைகள் வணிகபீட கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது 50ஆவது வருட நிறைவில் பொன் விழாக்காணும் சமகாலத்தில், முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம் தனது வெள்ளி விழாவைக் கொண்டாடுகிறது.

1974ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட போது, கலைப் பீடத்துடன் இணைந்து செயற்பட்டு வந்த வணிகத்துறை, 1999ஆம் ஆண்டு ஐந்தாவது தனிப்பீடமாக இயங்கத் தொடங்கியது. இப்பீடம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இலங்கையில் மாத்திரமன்றி உலகளாவிய ரீதியில் வணிக முகாமைத்துவக் கல்விக்கு பெரும்பங்களிப்பை வழங்கி வருகிறது.

பீடத்திலிருந்து பட்டம் பெற்று வெளியேறிய மாணவர்கள் இலங்கையில் மாத்திரமன்றி உலகளாவிய ரீதியிலும் பல்வேறு பெரும் பதவிகளை வகித்துவருகின்றனர். இப் பீடமானது பல்வேறு பெரும் பதவிகளை வகிக்கும் மாணவர்களை உருவாக்கிய அதேவேளை சமூகத்திற்கு பல்வேறு பங்களிப்புகளையும் நல்கி வந்துள்ளது.

முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகபீடம் காலத்தின் தேவைகருதி 1999 இலிருந்து வியாபார நிர்வாகமாணியில் கணக்கியல், நிதிமுகாமைத்துவம், மனிதவளம், சந்தைப்படுத்தல் துறைகளில் சிறப்பு பட்டத்தை வழங்கிவரும் அதே வேளை கடந்த ஆண்டிலிருந்து சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையில் சிறப்புப் பட்டத்துக்கான கற்கைநெறியையும் ஆரம்பித்துள்ளதுடன், வணிகமாணியில் கணிக்கியலும் நிதியும் மற்றும் தகவல் தொழில் நுட்பம் என்பவற்றில் சிறப்புப் பட்டத்தினையும் வழங்கி வருகின்றது. உள்வாரி மாணவர்களுக்கான இத்தகைய சிறப்புப் பட்டங்கள் மாத்திரமன்றி ஆயிரக்கணக்கான வெளிவாரி மாணவர்களுக்கு வணிகமாணி மற்றும் வியாபார முகாமைத்துவமாணி பட்டங்களையும் வழங்கிய பெருமை இந்த பீடத்தையே சாரும்.

உள்வாரியாகப் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதோர் தொழில் புரிந்துகொண்டே தமது கல்வியை வெளிவாரியாகத் தொடரக்கூடிய சந்தர்ப்பத்தை வழங்குகின்றமை ஒரு வரப்பிரசாதமாகும். (அ)

# பாக்கு விற்பனை நிலையங்களால் அதிகரித்து வரும் வாகன நெரிசல்!

வவுனியா, ஒக். 24
வவுனியா பூந்தோட்டம் பிரதான வீதியில் உள்ள பாக்கு விற்பனை செய்யும் கடைகளால் வாகன நெரிசல் ஏற்படுவதுடன் விபத்துக்களும் இடம்பெறுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக வவுனியா நகரிலிருந்து பூந்தோட்டம் செல்லும் பிரதான வீதியின் வயல்வெளிக் கரையிலும் பூந்தோட்டம் பொதுச் சந்தைக்கு அருகிலும் இவ்வாறான ஒரு வகை பாக்கு விற்பனை நிலையங்கள் காணப்படுகின்றன.

குறித்த வியாபார நிலையங்களுக்கு வருகை தரும் இளைஞர்கள் தமது வாகனங்களை பிரதான வீதிகளை அண்டி நிறுத்துவதால் அந்த பகுதிகளால் பயணம் செய்யும் பொதுமக்கள் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர்.

பிரதான வீதி மற்றும் சந்தை அமைந்துள்ள பகுதிகளானது அதிகமான வாகனங்கள் சென்று வருகின்ற ஒரு வீதியாக காணப்படுகின்றது. இந்நிலைமையில் அங்கு பாக்கினை கொள்வனவு செய்யவரும் இளைஞர்களின் செயற்பாடுகளால் வாகன நெரிசல் ஏற்பட்டு வருவதுடன் அடிக்கடி விபத்துச் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன. எனவே குறித்த விடயம் தொடர்பாக பொலிஸார் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, குறித்த பாக்கு விற்பனை நிலையங்களில் மாவா என்ற ஒருவகை போதைப் பாக்கு விற்பனை இடம்பெறுவதாக தெரிவித்து கடந்த காலங்களில் வவுனியா பொலிஸாரால் சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் சிறுவர் தின நிகழ்வு

கிளிநொச்சி, ஒக். 24
கிளிநொச்சி மாவட்ட செயலகமும், கிளிநொச்சி மாவட்ட சிறுவர் சபையும் இணைந்து நடத்திய சிறுவர் தின நிகழ்வு நேற்று முன் தினம் மாவட்ட செயலக திறன் விருத்தி மண்டபத்தில் இடம்பெற்றது.

காணிப் பகுதிக்கான பதில் அரசாங்க அதிபர் நளாயினி இன்பராஜ் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக, கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தர்மராஜன் வினோதன் பங்கேற்றார்.

சிறப்பு விருந்தினர்களாக, மாவட்ட சிறுவர் மற்றும் பெண்கள் பொலிஸ் பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரி லக்மாலி குலசேகர, கிளிநொச்சி தெற்கு கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சுந்தையா யுவராசா, கிளிநொச்சி வடக்கு கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் பொன்னம்பலம் விஜயநாதன் ஆகியோர் பங்கேற்றனர்.

இதன் போது, சிறுவர்களின் கலை நிகழ்வுகள், நிகழ்வை அலங்கரித்தன. (அ)

# யாழ். நாக விகாரையில் கட்டின புண்ணிய பூசை

யாழ்ப்பாணம், ஒக். 24
யாழ்ப்பாணம், ஆரியகுளம் ஸ்ரீநாக விகாரையில் எதிர்வரும் 27 ஆம் திகதி வஸ்திர தானம் கட்டின புண்ணிய பூசை நடைபெறவுள்ளது.

இந்த பூசை யாழ்ப்பாண பாதுகாப்புப்படை கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ளது.

அனைத்து மதங்களின் தலைவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ள இந்த புண்ணிய பூசையில் கலந்து கொள்ளுமாறு சர்வதேச தமிழ் பௌத்த காங்கிரஸ், சர்வதேச இந்து பௌத்த ஒற்றுமைக்கான அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது. (அ)

# 1400 போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 24
யாழ்ப்பாணத்தில் 1,400 போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மானிப்பாய் பகுதியில் [illegible] சாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சந்தேக நபரை கைது செய்தனர்.

சந்தேக நபரிடம் இருந்து 1400 போதை மாத்திரைகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். அதனை தொடர்ந்து அவரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
24 ஒக்ரோபர் 2024 வியாழக்கிழமை


# வடக்கு கடலில் மீன்பிடி பிரச்னைகளை தீர்ப்பது தொடர்பில் விசேட அவதானம்!

## ஜனாதிபதியின் செயலாளருடன் இந்திய தூதுவர் கலந்துரையாடல்



**கொழும்பு, ஒக். 24**

**இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக குமாநாயக்கவை நேற்று முன் தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.**

இதன்போது வடக்குக் கடலில் தற்போது நிலவும் கடற்றொழில் பிரச்னைகளை தீர்ப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இதன்படி, ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் மூலம் இரு நாட்டு மீனவர்களின் பிரச்னைகளுக்கு நீண்ட கால தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தை இரு தரப்பினரும் வலியுறுத்தியிருந்தனர்.

மேலும், இரு நாடுகளும் எதிர்கொள்ளும் பொதுவான சவால்களை வெற்றிகொள்வதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

இச்சந்திப்பில் இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் இந்திய திட்டங்கள் தொடர்பிலும் மீளாய்வு நடத்தப்பட்டது.

அத்துடன் இந்தியக் கடன் உதவிகள் மூலம் நிதியளிக்கப்பட்ட திட்டங்களின் தற்போதைய முன்னேற்றம் குறித்து மேலும் ஆராயப்பட்டதுடன், திட்டப்பணிகளை உரிய நேரத்தில் நிறைவுசெய்வதற்காக அந்தப் பணிகளை விரைவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் ஆராயப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# விவசாய அமைச்சு இயங்கிய கட்டடம் குறித்து விசாரணை

கொழும்பு, ஒக். 24

நல்லாட்சி அரசாங்கத்தின் போது விவசாய அமைச்சு இயங்குவதற்காக ராஜகிரியவில் கட்டடம் ஒன்று வாடகைக்கு பெறப்பட்டமை தொடர்பில் அரசாங்கம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

கட்டடத்தை வாடகை அடிப்படையில் பெறுவதற்கு 66 கோடி ரூபா வைப்புத்தொகையை உரிமையாளருக்கு அரசாங்கம் வழங்கியுள்ளதாகவும், கட்டடம் கையளிக்கப்பட்டு பல வருடங்கள் ஆகியும் வைப்புத்தொகை திரும்ப வழங்கப்படவில்லை எனவும் விவசாய அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

இது தொடர்பாக சட்டமா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிவுறுத்தல்களை கோரியுள்ளதாகவும் அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார். (அ)

# மாடியிலிருந்து கீழே விழுந்து பல்கலை மாணவன் மரணம்

கொழும்பு, ஒக். 24

களனி பல்கலைக்கழக மாணவன் ஒருவர், மாணவர் விடுதியின் மேல் தளத்தில் இருந்து கீழே விழுந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மாணவன் நேற்று காலை சி.டபிள்யு.டபிள்யு கன்னங்கர மாணவர் விடுதியின் மேல் தளத்தில் இருந்து விழுந்து உயிரிழந்துள்ளதாக, தெரிவிக்கப்படுகிறது. களனி பழகலைக்கழகத்தில் மூன்றாம் வருடத்தில் கல்வி கற்கும் பண்டார என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களனி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# தபால் ஊழியர்களின் விடுமுறைகள் இரத்து!

கொழும்பு, ஒக். 24

பொதுத் தேர்தல் தொடர்பான செயற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, நாட்டில் அனைத்து தபால் ஊழியர்களின் விடுமுறையும் நேற்று முதல் இரத்து செய்யப்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று முதல் நவம்பர் 14 ஆம் திகதி வரை அனைத்து ஊழியர்களின் விடுமுறையையும் இரத்து செய்யப்பட்டுள்ளதாக பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.

ஊழியர்களுக்கு அவசர அல்லது திடீர் சுகயீன விடுமுறை தேவைப்படுமானால், மாகாண பிரதி தபால் மா அதிபரின் அனுமதிக்கு உட்பட்டு விடுமுறையை அங்கீகரிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வெள்ள பேரிடர் நிவாரணமாக ரூபா 3 கோடி அளித்தது சீனா!

கொழும்பு, ஒக். 24

தென்னிலங்கையில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக சீன அரசாங்கம் ஒரு இலட்சம் டொலரை (சுமார் 3 கோடி ரூபாயை) வழங்கியுள்ளது.

ஜனாதிபதி பணிமனையில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை சந்தித்த இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ ஷென் ஹொங் இந்த உதவித் தொகையை உத்தியோகபூர்வமாக ஜனாதிபதியிடம் கையளித்தார்.

இந்த சந்திப்பில், அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசரகால நிவாரணம் வழங்குவதற்கும் வெள்ளத்தடுப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக எடுக்க வேண்டிய நீண்டகால உத்திகள் குறித்தும் ஆராயப்பட்டது.

அண்மையில் தென்னிலங்கையில் பெய்த கனமழையால் 10 மாவட்டங்களுக்கு மேல் கடுமையான பாதிப்பை சந்தித்தன. ஆயிரக்கணக்கானவர்கள் இடம்பெயர்ந்ததுடன், பல வீடுகள் சேதமடைந்தன. விவசாயமும் பேரழிவை சந்தித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஜனாதிபதித் தேர்தல் பிரசார செலவு மக்களுக்கு பகிரங்கப்படுத்தப்படும்!

கொழும்பு, ஒக். 24

ஜனாதிபதித் தேர்தல் போது பிரசாரங்களுக்காக வேட்பாளர்கள் செலவு செய்த செலவுகள் தொடர்பான விவரங்களை அறிந்துக் கொள்ளும் உரிமை நாட்டு மக்களுக்கு உண்டு. ஆகவே சமர்ப்பிக்கப்பட்டுள்ள செலவினங்கள் தொடர்பான விவரங்களை காட்சிப்படுத்தும் இடம் மற்றும் திகதி அறிவிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுத்தேர்தலுக்கான பணிகள் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றன. தேர்தல் செலவினங்கள் தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.



மாவட்டங்களின் நிலப்பரப்பு மற்றும் சனத்தொகை, தேர்தல் தொகுதிகளில் உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை மற்றும் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் யோசனைகளுக்கு அமைவாகவே தேர்தல் செலவுத் தொகை தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகவே தேர்தல் பிரசார செலவுத் தொகை மாவட்டத்துக்கு மாவட்டம் வேறுபடும்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் தேர்தல் பிரசார செலவுகள் தொடர்பிலான குறிப்புக்களை முறையாக பேணவேண்டும். முடிவுகள் வெளியாகி 21 நாட்களுக்குள் செலவினம் தொடர்பான விபரங்களை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கவேண்டும். செலவுகளை சமர்ப்பிக்காவிடின் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட 35 வேட்பாளர்கள் உரிய காலத்தில் பிரசார செலவினங்கள் தொடர்பிலான விவரத் திரட்டை உரிய காலத்தில் சமர்ப்பித்தனர். 3 வேட்பாளர்கள் தாமதமான நிலையில் தான் விவரங்களை சமர்ப்பித்தனர்.10 அரசியல் கட்சிகள் தேர்தல் பிரசார செலவுகளை சமர்ப்பிக்கவில்லை-என்றார். (அ)

# கொள்ளையிட முற்பட்ட குழுவினர் மீது பாதுகாப்பு அலுவலர் துப்பாக்கிச் சூடு!

கொழும்பு, ஒக். 24

இரத்மலானை ரயில் முனையத்தில் கொள்ளையிட முற்பட்ட குழு மீது, பாதுகாப்பு அதிகாரி ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இதன்போது இடம்பெற்ற மோதலில் பாதுகாப்பு அதிகாரி ஒருவருக்கும் காயம் ஏற்பட்டுள்ளதாகத் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த பாதுகாப்பு அதிகாரியும், துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான சந்தேக நபரும் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சீனத் தூதரகத்தின் பிரதி பிரதானி ஜனாதிபதியின் செயலருடன் பேச்சு

கொழும்பு, ஒக். 24

சீனத் தூதரகத்தின் பிரதிப் பிரதானி சூ யன்வெய், ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்கவை நேற்று முன் தினம் ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது சீனா - இலங்கை இருதரப்பு உறவுகளை பல்வேறு துறைகளில் மேலும் விரிவுபடுத்துவது குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன், சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு மற்றும் பரஸ்பர மரியாதை என்பன குறித்து இதன் போது நினைவு கூரப்பட்டதுடன், இரு நாடுகளுக்குமிடையிலான சமூக, கலாசார மற்றும் பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான புதிய வழிமுறைகள் குறித்தும் ஆராயப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வட்டுக்கோட்டையில் பனை மரம் கடத்திச்சென்ற ஒருவர் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஒக். 24

சட்டவிரோதமாக பனை மரங்களை கடத்திச் சென்ற நபர் ஒருவர், நேற்று முன் தினம் மாலை, யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, பனை மரங்களும், அவற்றை கொண்டு செல்வதற்கு பயன்படுத்தப்பட்ட வாகனமும், பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

அளவெட்டி பகுதியைச் சேர்ந்த 41 வயதான நபர், காரைநகரில் இருந்து அளவெட்டி பகுதிக்கு, பனை மரங்களை கொண்டு சென்ற வேளை, பொன்னாலை பகுதியில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமையாக செயல்படாவிடில் திருமலையில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இல்லாமல் ஆகிவிடும்!

## குகதாசன் எச்சரிக்கை

திருமலை, ஒக். 24

**இம்முறை நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் தமிழ் மக்கள் 80 சதவீதமான வாக்குகளை அளித்தால் இரு பிரதிநிதிகளை பெறலாம் என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட் பாராளுன்ற முதன்மை வேட்பாளரும் முன்னால் பாராளுமன்ற உறுப்பினருமான சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.**

திருகோணமலையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் இருந்தால் தான் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 1985ஆம் ஆண்டு முதல் நில அபகரிப்பு செய்யப்பட்ட விவசாய மக்கள் காணிகளை மீளப் பெறலாம்.

வன இலாகா 4000 இற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களையும், தொல்பொருள் திணைக்களம் 2600 ஏக்கர்களையும், இது போன்று இலங்கை துறைமுக அதிகார சபை ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர்களையும் பௌத்த பிக்குகள் விகாரைக்கான கட்டுமானம் என்ற போர்வையில் பல ஏக்கர் நிலங்களையும் அபகரித்துள்ளனர்.

இதனை மீட்க தமிழ் மக்களுக்கான பிரதிநிதிகள் தேவை.

எனவே தான் அனைவரும் ஒன்றிணைந்து ஒரே குடையின் கீழ் செயற்படுவதுடன் ஊடாக திருகோணமலை மாவட்டத்தில் இரு ஆசனங்களை பெறலாம்.

ஒற்றுமையாக செயற்படாவிட்டால் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இல்லாமல் ஆகிவிடும்-என்றார். (அ)

# தமிழ் கட்சிகள் ஒற்றுமையாக இல்லை என்பது மக்களின் ஆதங்கமாக உள்ளது

## கஜதீபன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக். 24

ஒன்றுபட்ட தரப்பாக, ஒற்றுமையாக தமிழ் கட்சிகள் இல்லை என்கின்ற ஆதங்கம் மக்கள் மத்தியில் இருக்கின்றது. ஆனால் சங்கை சின்னமாகக் கொண்டிருக்கின்ற நாங்கள் மட்டுமே ஐந்து கட்சிகளை ஒன்றிணைத்து இந்த தேர்தல் களத்தை காணுகின்றோம் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பாராளுமன்ற வேட்பாளருமான கஜதீபன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பரந்தனில், தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தலுக்கு பின்பாக நடைபெறவிருக்கின்ற அரசியல் நிகழ்வுகளில், அரசியல் மாற்றங்களில் இந்த அணியுடன் கொள்கை அடிப்படையில் ஒத்து வேலை செய்யக்கூடிய அணியினரையும் ஒன்று திரட்டி, ஒரு பெரிய அளவிலான கட்டமைப்பை உருவாக்கி நாங்கள் வேலை செய்ய வேண்டி இருக்கின்றது.

இந்தப் பிரதேசத்தில் இருக்கக்கூடிய சந்தை வியாபாரிகள் தமக்கு இருக்கக்கூடிய மிகப் பெரிய அளவிலான பிரச்னைகளை எம்முடன் பகிர்ந்திருக்கின்றார்கள். கடந்த காலங்களில் இங்கு செயற்பட்டவர்களின் பலவீனமாகவே அது இருக்கின்றது. அந்த விடயங்கள் நிவர்த்தி செய்யப்படும்-என்றார். (அ-05)

# தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர்களின் அறிமுக நிகழ்வு

மட்டக்களப்பு, ஒக். 24

நாடாளுமன்றத் தேர்தலில், மட்டக்களப்பு மாவட்டத்தில், தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிடும், வேட்பாளர்களின் அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு தலைமை அலுவலகத்தில் இடம் பெற்ற நிகழ்வில் கட்சியின் ஆதரவாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கட்சியின் தலைவரும் வேட்பாளருமான ரி. அருண்மொழிவர்மன் உட்பட எட்டு வேட்பாளர்களும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். (அ)

# தமிழரசின் நிலைக்கு சுமந்திரனே காரணம்

## கூறுகிறார் விமலேஸ்வரி

யாழ்ப்பாணம், ஒக். 24

தமிழரசுக் கட்சி நிலைகுலைந்துள்ளதாகவும் கட்சிக்கு இந்த நிலையைக் கொண்டுவந்தவர் எம்.ஏ.சுமந்திரன் எனவும் ஜனநாய தமிழரசுக் கூட்டமைப்பு வேட்பாளர் விமலேஸ்வரி சிறீ காந்தரூபன் தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன், தமிரசுக் கட்சிக்குள் எவ்வாறு வந்தார் என்ற உண்மையை அவர் வெளிக்கொணர வேண்டும் என வும் விமலேஸ்வரி சிறீகாந்தரூபன் குறிப்பிட்டார். (அ)

# திருமலையில் விசேட பூசைகளுடன் தேர்தல் பரப்புரையை ஆரம்பித்த தமிழரசு கட்சியினர்

திருமலை, ஒக். 24

திருகோணமலை மனையாவெளி வல்லவசக்தி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசைகளை தொடர்ந்து இலங்கை தமிழரசு கட்சியின் பிரசார பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இதில் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சண்முகம் குகதாசன் உட்பட்ட பலர் கலந்து கொண்டனர். (அ)



# எத்தனை இடர்கள் வந்தாலும் மக்கள் பணியினின்று ஓயோம்!

## கூறுகின்றார் சிறிதரன்

கிளிநொச்சி, ஒக். 24

கடந்த பதினைந்து ஆண்டு கால மக்கள் பணியில், என்றுமில்லாதவாறு சதிகள், சூழ்ச்சிகள், சேறுபூசல்கள், பொய்ப் பிரசாரங்கள் என்பவற்றின் ஊடாக மக்கள் மத்தியில் எமக்கிருக்கும் செல்வாக்கை மதிப்பிழக்கச் செய்யும் வகையிலான செயல்பாடுகளைப் பலரும் முன்னெடுத்து வருகிறார்கள். ஆனால், எமது மக்கள் தீர்க்கம் நிறைந்த அரசியல் பார்வையோடும், தெரிவுகள் குறித்த தெளிவோடும் இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். எத்தகைய இடர்களும் தடைகளும் வந்தாலும் இதுவரை காலமும் தனிமனித அறம் வழுவாது ஆற்றிய பணிகளின் தடத்தில், இனியும் எனது அரசியற் களப்பணி தொடரும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.



நேற்று முன்தினம், பூநகரி பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்திகொண்டு, சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் மக்களுடன் கலந்துரையாடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (அ)

# வேட்பாளர்களுக்கு வரவேற்பு



அம்பாறை, ஒக். 24

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களின் வெற்றிக்காக கல்முனை புலவிப்பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடு நிகழ்வு நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

அங்கு ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் நாவிதன் வெளி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான சோ. புஷ்பராசா, கி. லிங்கேஸ்வரன், த. துரைசிங்கம் ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தி வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கல்முனை புத்திஜீவிகள் உட்பட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பூசை வழிபாடுகளை தொடர்ந்து கல்முனை பிரதான வீதிகளில் உள்ள வியாபார ஸ்தலங்களுக்கு தேர்தல் பரப்புரையினையும் இவர்கள் மேற்கொண்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி அநுர மக்களுக்கு வழங்கிய வாக்குறுதி தோல்வி

## ராஜித சேனாரத்ன குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 24

**மக்களின் வாழ்வாதார செலவை குறைத்து நிவாரணம் வழங்குவதாகவும் வட் வரியை குறைப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமல் போயுள்ளது. அரச வருமானத்துக்கான வழிவகைகள் இல்லாமையே இதற்கு காரணமாகும் என புதிய ஜனநாயக முன்னணியின் களுத்துறை மாவட்ட வேட்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.**

கொழும்பில் நடந்த மக்கள் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச நாணய நிதியத்தின் வரி அழுத்தங்களில் இருந்து மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாகவும் வருமான வரி எல்லையை அதிகரிப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின்போது வாக்குறுதி வழங்கி இருந்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் திருத்தம் மேற்கொள்வதாக இருந்தால், எமக்கு கடன் வழங்கிய 18 நிறுவனங்கள் மற்றும் 3 நாடுகளுடன் கலந்துரையாடி இணக்கப்பாடு எட்டப்பட்டாலே சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் திருத்தம் மேற்கொள்ள முடியும்.

ஒரு இலட்சம் வருமானம் பெறுபவர்களிடம் வருமானவரி அறவிடும் எல்லையை இரண்டு இலட்சமாக மாற்றுவதாக இவர்கள் மக்களுக்கு வாக்குறுதி வழங்கினார்கள். சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் கடந்த மாதம் இலங்கைக்கு வந்திருந்த போது, இது தொடர்பில் கலந்துரையாட அரசாங்கம் சார்பாக சிலர் சென்றார்கள்.

அதில் நிதி அமைச்சின் அதிகாரிகளோ மத்திய வங்கி அதிகாரிகளோ கலந்துகொண்டிருக்கவில்லை. இவர்களின் இந்த கோரிக்கைக்கு நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்தார்கள். ஆனால் இதனால் இழக்கப்படும் வருமானத்தை எவ்வாறு பெற்றுக் கொள்வது என்ற கேள்விக்கு இவர்களிடம் பதில் இருக்கவில்லை.

அதேபோன்று வற் வரியை குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் இவர்கள் நாணய நிதியத்துடன் கலந்துரையாடினார்கள். அதற்கும் நாணய நிதிய பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர். ஆனால் வற் வரியை குறைப்பதால் அரசாங்கத்துக்கு இல்லாமல்போகும் வருமானத்தை எந்த வழியில் பெற்றுக் கொள்வது என்ற கேள்விக்கு இவர்களிடம் பதில் இருக்கவில்லை.

நாணய நிதியத்துடன் கலந்துரையாடலுக்குச் சென்றவர்கள் எந்த தயார்ப்படுத்தலும் இல்லாமலே சென்றிருந்தார்கள். அநுரகுமாரவின் கட்சியில் இருக்கும் புத்திஜீவிகள் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் இதனை வெற்றிகரமாக பேசி முடிப்பார்கள் என்றே நினைத்தார்கள்.

இறுதியில் நாணய நிதியத்துடன் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் எட்டிய இணக்கப்பாட்டை அவ்வாறே முன்னெடுத்துச் செல்வதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். இதன் மூலம் அநுரகுமார திஸாநாயக்க மக்களுக்கு வழங்கிய முதலாவது வாக்குறுதி தோல்வியடைந்துள்ளது- என்றார். (அ)

# தமிழ் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்க அனைவருமே கைகோக்கவேண்டும்!

## வடிவேல் சுரேஷ் அழைப்பு

கொழும்பு, ஒக். 24

பதுளை மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அனைவரும் கைக்கோர்க்க வேண்டுமென ஐக்கிய ஜனநாயக குரலின் பதுளை மாவட்ட பாராளுமன்ற வேட்பாளர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

பசறை பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தமிழ் மக்களின் வாக்குகளை சிதறடிப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற சதித்திட்டங்களை ஒற்றுமையால் முறியடிக்க வேண்டுமெனவும் வடிவேல் சுரேஷ் கோரியுள்ளார். (அ)

# ஜனாதிபதி அநுரவின் மாற்றம் பொருட்களின் விலையேற்றமே!

## இராதாகிருஷ்ணன் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஒக். 24

நாட்டின் சந்தையில் தற்பொழுது தேங்காய் விலை அதிகரித்துள்ளது. பாக்கின் விலை அதிகரித்துள்ளது. முட்டை ஒன்று 30 ரூபாய்க்கு தருவதாக சொன்னார்கள். ஆனால் தற்பொழுது 50 ரூபாய்க்கு அதிகமான விலையில் விற்பனை செய்யப்படுகிறது. இதுவா மாற்றம் என ஐக்கிய மக்கள் கூட்டணியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

பொதுத்தேர்தலை இலக்காக கொண்டு நுவரெலியா - நானுஓயா காந்தி கலாச்சார மண்டபத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தேர்தல் பிரசார கூட்டம் நடைபெற்றது.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணனின் தலைமையில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் உதயகுமார் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ராஜாராம் ராதாகிருஷ்ணன் ஆகியோரின் பங்குபற்றலுடன் இக்கூட்டம் இடம்பெற்றது.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் அங்கத்தவர்கள் மற்றும் பொதுமக்கள், தோட்டத் தலைவர்கள், தலைவிமார்கள், இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈஸ்டர் குண்டு தாக்குதல் செய்தவர்களை பிடிப்பதாக ஜனாதிபதி கூறியிருந்தார். ஆனால் இன்று வரை அதற்கான எந்த வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

அத்தோடு தற்பொழுது சந்தையில் தேங்காய் விலை அதிகரித்துள்ளது. முட்டை ஒன்று 30 ரூபாய்க்கு தருவதாக சொன்னார்கள். ஆனால் தற்பொழுது 50 ரூபாய்க்கு அதிகமான விலையில் முட்டை ஒன்று விற்பனை செய்யப்படுகிறது.

தன்னிடம் ஊழல் செய்த அரசியல்வாதிகளின் கோப்புகள் அதிகமாக இருப்பதாகவும், அதனை தான் ஆட்சிக்கு வந்த பிறகு வெளிப்படுத்துவதாகவும் ஜனாதிபதி கூறியிருந்தார் .

ஆனால் இன்று வரை அது தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இப்பொழுது இருக்கும் சூழ்நிலையில் தற்பொழுது மலையகப் பகுதியில் உள்ள மக்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளனர்.

தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தது தவறு என அநேகமானவர்கள் சொல்கிறார்கள். தமிழ் பிரதிநிதித்துவம் கட்டாயம் தேவை. அதற்கு நாங்கள் வாக்களிப்போம் என பலரும் தற்பொழுது உணர்ந்துள்ளனர்-என்றார். (அ)

# “எங்கள் கட்சியை நாட்டு மக்கள் எதிர்க்கட்சியாக தெரிவு செய்வர்”

கொழும்பு, ஒக். 24

நாட்டுக்கு பலமான எதிர்க்கட்சியொன்றின் தேவை எழுந்துள்ளதால், ஐக்கிய ஜனநாயகக் குரல் கட்சியை மக்கள் எதிர்க்கட்சியாக தெரிவு செய்வார்கள் என்ற நம்பிக்கை இருப்பதாக அந்தக் கட்சியின் தலைவர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய ஜனநாயகக் குரல் கட்சியின் கம்பஹா மாவட்ட கூட்டம் நீர்க்கொழும்பில் அமைந்துள்ள தனியார் ஹோட்டலில் இடம்பெற்ற போதே அவர் இதனை தெரிவித்தார்.


எனது செயற்பாடுகள், நான் இதற்கு முன்னர் இருந்தக் கட்சிகளுக்கு பலன் இல்லை என்றே அந்தக் கட்சியினரால் எனக்கு முத்திரைக் குத்தப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

திருடர்களை பிடிக்கும் எனது போராட்டத்தின்போது, நான் முதலில் பிடித்தது எனது கட்சிக்கார்களைத்தான். இந்தத் திருடர்களுடன் ஒன்றாக இணைந்து பணியாற்ற முடியாது என்பதால்தான் நான் வெளியே வந்தேன் என்றும் அவர் கூறினார்.

எம்மை விமர்சிக்கும் எனது கொள்கைகளுக்கு எதிரான பலர் கட்சிகளின் சலூன் கதவுகள் வாயிலாக வந்துள்ளார்கள். இதனால்தான் நான் புதியக் கட்சிக்கு வந்தேன். இன்று எமக்கு பலமானதொரு எதிர்க்கட்சியின் தேவை எழுந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# தற்போதைய அரசைக் கவிழ்த்து நாமலை ஜனாதிபதி ஆக்குவோம்!

## சஞ்சீவ எதிரிமன்ன சூளுரை



கொழும்பு, ஒக். 24

தற்போதைய அரசாங்கத்தை கவிழ்த்து நாமல் ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குவோம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு இந்த நாட்டின் கலாசாரத்தை மாற்றியமைப்பதற்கான அதிகாரம் கிடையாது.

மாற்றம் செய்ய வேண்டுமாயின் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையில் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும், அவ்வாறு செய்யத் தவறினால் ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகும் முன் இந்த அரசாங்கத்தை கவிழ்த்து நாமல் ராஜபக்ஷவை ஜனாதிபதி பதவியில் அமர்த்த நேரிடும்-என்றார்.

# ஜனாதிபதியுடன் இணைந்து நாணய நிதிய உடன்படிக்கையில் திருத்தம் செய்ய தயார்!

## சஜித் பிரேமதாஸ அறிவிப்பு

கொழும்பு, ஒக். 24

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை கிடைக்குமாயின், ஜனாதிபதியுடன் இணைந்து சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையில் திருத்தங்களை மேற்கொள்வதற்குத் தயாராக உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் மத்திய கொழும்பு தேர்தல் தொகுதி செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியாக இருந்தபோது, சர்வதேச நாணய நிதியத்துடன் பல சுற்றுப்பேச்சு வார்த்தைகளை நடத்தியது.

அதன்போது, முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வந்த நியாயமற்ற வரிச் சூத்திரம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டது.

இலக்கு நிர்ணயிக்கப்பட்ட அரச வருவாயைவிட அதிக வருவாயைப் பெறும் இந்த நியாயமற்ற வரி சூத்திரத்தை மக்கள் ஆணை மூலம் மாற்றியமைப்போம் என கூறினோம்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி இந்த வரிச்சூத்திரத்தை மாற்றும் என மக்கள் எதிர்பார்த்துள்ளனர்.

எனவே ஜனாதிபதி கூறியதை போல பேச்சில் மாத்திரமல்லாது நடைமுறையிலும் செயற்பட வேண்டும்.

அதன்படி ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற பெரும்பான்மையைப் பெற்று ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவுடன் கைகோர்த்து, இந்த இணக்கப்பாட்டை மாற்றியமைக்கும் செயல்முறைக்கு ஆதரவை வழங்கும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீயோன் தேவாலயம் அருகே நடமாடிய இரு நபர்கள் கைது

மட்டக்களப்பு, ஒக். 23

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடைபெற்ற மட்டக்களப்பு சீயோன் தேவாலயம் அருகே சந்தேகத்துக்கு இடமாக நடமாடிய இருவர் நேற்று கைது செய்யப்பட்டனர்.**

கைதானவர்கள் இருவரும் குருநாகல் மாவட்டத்தை சேர்ந்தவர்களாவர். சிறுபான்மை மதத்தை சேர்ந்த இருவரில் ஒருவர் கண்ணில் ஏற்பட்டுள்ள வெண்படல நோயை குணப்படுத்துவதற்காக சீயோன் தேவாலயத்தில் போதகருடன் தொடர்பு கொண்டுள்ளார் என்றும் மற்றையவர் அவருக்கு உதவியாக வந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் இருவரும் அந்தப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய நிலையில் பொலிஸாருக்கு அளித்த தகவலின் அடிப்படையில் இருவரும் கைது செய்யப்பட்டனர். கைதான இருவரும் 35, 29 வயது நபர்களாவர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## கரையொதுங்கிய சுறா மீண்டும் கடலுக்கு!



நிந்தவூர், ஒக். 24

அம்பாறை - நிந்தவூர் கடற்கரையில் கரை ஒதுங்கிய இராட்சத சுறா பாதுகாப்பாக மீண்டும் கடலுக்குள் விடப்பட்டது.

உயிருடன் கரையொதுங்கிய இராட்சத சுறாவை நேற்று முன்தினம் மீனவர்கள் அவதானித்தனர்.

இந்நிலையில் கடற்கரையில் ஒதுங்கிய குறித்த இராட்சத சுறா மீனை அப்பகுதி மீனவர்கள் ஒன்றிணைந்து மீண்டும் கடலுக்குள் அனுப்பி வைத்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)



## சாய்ந்தமருது நூலகத்தில் வாசிப்பு மாத விசேட நிகழ்வு

சாய்ந்தமருது, ஒக். 24

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாய்ந்தமருது பொது நூலகம் ஒழுங்கு செய்திருந்த விசேடநிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

"உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே" என்ற தொனிப் பொருளின் நூலகர் ஏ. எச். தௌபீக் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ. எஸ். எம். அஸீம் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இந்நிகழ்வுக்கு சாய்ந்தமருது ஜி. எம். எம். எஸ். பாடசாலை மாணவர்கள் விசேடமாக அழைக்கப்பட்டு அவர்களுக்கு நூலக சேவை அறிமுகம் செய்து வைக்கப்பட்டதுடன் வாசிப்பை ஊக்குவிக்கும் வகையிலான நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

நிகழ்வில் பங்கேற்ற மாணவர்கள் அனைவருக்கும் பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் பலர் பங்கேற்றனர். (ஐ)

# உளநல தினத்தை முன்னிட்டு நாடகம் மூலம் விழிப்புணர்வு

காரைதீவு, ஒக். 24

தேசிய உளவள தினத்தை முன்னிட்டு மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தில் வீதி நாடகம் மூலம் விழிப்புணர்வு முன்னெடுக்கப்பட்டது.

பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்தினம், உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி ஆகியோரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலில் "பணியிடத்தில் மனநலத்துக்கு முன்னுரிமை அளிக்க வேண்டிய நேரம் இது", எனும் தலைப்பில் இந்த வீதி நாடகம் முன்னெடுக்கப்பட்டது.

வீதி நாடகத்தை தேற்றாத்தீவு மகா வித்தியாலய மாணவர்கள் ஆற்றுகை செய்திருந்தனர்.

குறித்த நிகழ்வில் வேலைத்தளங்களில் ஏற்படும் மன அழுத்தங்கள் மற்றும் அதிலிருந்து



விடுபடுவதற்கான வழிகாட்டல்களையும் சிறப்பான முறையில் மாணவர்கள் ஆற்றுகை செய்திருந்ததுடன், அவர்களுக்கான பாராட்டு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய அலுவலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்ததுடன், இந்த நிகழ்வை பிரதேச செயலக உளவளத்துணை அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி என். கோகிலா ஒழுங்கமைப்பு செய்திருந்தார். (ஐ)

# இரத்த தானத்தை ஊக்குவிக்க மட்டக்களப்பில் விழிப்புணர்வு



மட்டக்களப்பு, ஒக். 24

ஆரையம்பதியில் இரத்ததானத்தை ஊக்குவிக்கும் வகையில் விழிப்புணர்வு ஊர்வலம் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் 'உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்' என்னும் தொனிப் பொருளில் விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது.

நான்காம் கட்டை சந்தியிலிருந்து ஆரம்பமான ஊர்வலம், ஆரையம்பதி மாவட்ட மருத்துவமனையில் நிறைவு பெற்றது.

விழிப்புணர்வு ஊர்வலத்தில் இரத்த தானத்தை ஊக்குவிக்கும் வகையில் எழுதப்பட்ட சுலோகங்கள், பதாதைகளை பங்குபற்றியவர்கள் தாங்கிச்சென்றனர்.

தலசீமியா நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான இரத்தம் தேவைப்பாடு தொடர்பில் ஊர்வலத்தின்போது விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் மட்டக்களப்பு மாவட்ட இயக்குனர் அருட்தந்தை நிக்சன், ஜெகதீஸ்வரன் குருக்கள், மௌலவி ஷாஜஹான் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (ஐ)



## இராமகிருஷ்ண கல்லூரியில் மாணவருக்கு சின்னம் சூட்டல்!

காரைதீவு, ஒக். 24

அக்கரைப்பற்று சிறீ இராம கிருஸ்ணா கல்லூரி தேசிய பாடசாலையின் மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வானது பாடசாலையின் அதிபர். ஜே. ஆர். டேவிட் அமிர்தலிங்கம் தலைமையில் நேற்று நடைபெற்றது.

பாடசாலை மண்டபத்தில் நடந்த இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக திருக்கோவில் வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர். உதயகுமார் மற்றும் கௌரவ அதிதியாக நிதிபதி ரி. கருணாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறப்பு அதிதிகளாக திருக்கோவில் கல்வி வலயத்தின் பிரதி கல்விப் பணிப்பாளர், ஏ. எம். நௌபர்டீன் மற்றும் ஆலையடி வேம்பு கோட்டக் கல்விப் பணிப்பாளரும், பிரதிக் கல்விப் பணிப்பாளருமான கே. கமலமோகனதாசன், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர், எஸ்.பி. அகிலன்,பழைய மாணவர் சங்க உறுப்பினர். வி.சுகிர்தகுமார் ஆகியோரும் பங்கேற்றனர். (ஐ)

## தமிழ்க் கட்சிகளுக்கே வாக்களிக்க வேண்டும்!

### கிழக்கு பல்கலை. மாணவர்

மட்டக்களப்பு, ஒக். 24

கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் இருப்பைக் கருத்தில் கொண்டு, தமிழ் தேசியம் பேசும் கட்சிகளுக்கே தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் இவ்வாறு கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

அண்மையில், யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய ஊடக சந்திப்பிலும் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கே தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யா - உக்ரைன் மோதல் அமைதி வழி தீர்வு அவசியம்

## புடினிடம் வலியுறுத்தினார் மோடி

கசான், ஒக். 24

**ரஷ்யா - உக்ரைன் இடையே நிலவும் மோதல்கள் அனைத்தும் அமைதியான முறையில் தீர்க்கப்பட வேண்டும் என்று விளாடிமிர் புடினுடனான பேச்சின்போது இந்திய பிரதமர் மோடி வலியுறுத்தினார்.**

பிரிக்ஸ் கூட்டமைப்பின் 16ஆவது மாநாடு ரஷ்யாவின் கசான் நகரில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டுக்காக இந்திய பிரதமர் மோடி ரஷ்யா சென்றுள்ளார்.

இதன்போது, ரஷ்ய ஜனாதிபதி புடினை சந்தித்து இந்தியப் பிரதமர் மோடி பேச்சு நடத்தினார்.

இதன்போது உரையாற்றிய புடின்,

இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான ஒத்துழைப்பை நாங்கள் மிகவும் முக்கியமானதாக கருதுகிறோம். குறிப்பாக, இந்தியாவும் ரஷ்யாவும் பிரிக்ஸ் அமைப்பின் முக்கிய உறுப்பு நாடுகள் என்பதை மனதில் கொண்டுள்ளோம். இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான கூட்டாண்மை மிகவும் சிறப்பு வாய்ந்தது. நமது இந்த உறவு தொடர்ந்து வளர்ந்து வருகிறது - என்று கூறினார்.

தொடர்ந்து பேசிய மோடி, "ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையே நிலவும் மோதல்கள் அமைதியான முறையில் தீர்க்கப்பட வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம். அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை முன் கூட்டியே நிறுவுவதை நாங்கள் முழுமையாக ஆதரிக்கிறோம். முயற்சிகள் அனைத்தும் மனித நேயத்துக்கு முன்னுரிமை அளிக்கின்றன. வரும் காலங்களில் அனைத்து விதமான ஒத்துழைப்பையும் வழங்க இந்தியா தயாராக உள்ளது. ரஷ்யா - உக்ரைன் இடையே நிலவும் மோதல் விவகாரத்தில் நான் தொடர்ந்து உங்களுடன் தொடர்பில் இருந்தேன். நான் முன்பே கூறியது போல், பிரச்னைகள் அமைதியான முறையில் தீர்க்கப்பட வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம். அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை நாங்கள் முழுமையாக ஆதரிப்போம்" - என்றார். (ஐ)

# ஹிஸ்புல்லாவின் புதிய தலைவரும் படுகொலை!

## இஸ்ரேல் இராணுவம் அறிவிப்பு

டெல்அவிவ், ஒக். 24

ஹிஸ்புல்லா அமைப்பின் புதிய தலைவரான ஹாஷேம் சபிதீன் கொல்லப்பட்டார் என்று இஸ்ரேல் இராணுவம் அறிவித்தது.

ஹமாஸுக்கு ஆதரவாக தனது நாட்டின்மீது தாக்குதல் நடத்திய ஹிஸ்புல்லா அமைப்பை ஒழிக்கும் நோக்கில் லெபனானில் தாக்குதல்களை நடத்தி வருகிறது இஸ்ரேல்.

இந்தத் தாக்குதல்களில் அண்மையில் ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா கொல்லப்பட்டார். இதன்பின்னர் தலைமை பதவிக்கு வந்த யாஹ்யா சின்வாரும் அவருக்கு அடுத்த நிலையிலிருந்த முக்கிய தளபதிகளும் கொல்லப்பட்டனர்.

இந்த நிலையில், ஹிஸ்புல்லா போராளிகள் தமது புதிய தலைவரை தெரிவுசெய்ததுடன், அது பற்றி தகவலை வெளியிடாமல் வைத்திருந்தனர்.

இந்த நிலையில், ஹிஸ்புல்லா இயக்கத்தின் புதிய தலைவர் சபிதீன் கொல்லப்பட்டார் என்று இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது. இந்தத் தாக்குதலில் ஹிஸ்புல்லா புலனாய்வு இயக்குநரகத்தின் தலைவர் அலி ஹூசைன் ஹசிமா ஆகியோர் ஹிஸ்புல்லா தளபதிகளுடன் கொல்லப்பட்டமை உறுதி செய்யப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இதேவேளை, லெபனானில் கடந்த செப்டம்பர் 23ஆம் திகதி இஸ்ரேல் தொடங்கிய தாக்குதலில் இதுவரை பலியானவர்களின் எண்ணிக்கை 1550ஆக அதிகரித்துள்ளது. (ஐ)

# கமலாவுக்கு பில் கேட்ஸ் ரூ. 1,470 கோடி நன்கொடை

நியூயோர்க், ஒக். 24

உலக பணக்காரரான பில் கேட்ஸ் அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளரான கமலா ஹாரிஸுக்கு ஆயிரத்து 470 கோடி ரூபாயை நன்கொடையாக அளித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் 5 நடைபெறவுள்ளது. இதனால், தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது. இந்தத் தேர்தலில், ஜனநாயக கட்சி சார்பில் உபஜனாதிபதி கமலா ஹாரிஸ் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து குடியரசு கட்சியின் சார்பில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் போட்டியிடுகிறார்.

தேர்தலில் போட்டியிடும் இரு வேட்பாளர்களுக்கும் நிதியுதவிகள் வழங்கப்படுகின்றன.

இந்தத் தேர்தலில் கமலா ஹாரிஸை ஆதரிக்கும் உலக பணக்காரர்களில் ஒருவரான பில் கேட்ஸ் 5 கோடி டொலர்களை - நம் நாட்டு மதிப்பில் சுமார் ஆயிரத்து 470 கோடி ரூபாயை நன்கொடையாக அளித்துள்ளார் என்று நியூயோர்க் ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

போர்ப்ஸ் அறிக்கையின்படி, 81 கோடீஸ்வரர்கள் இதுவரை கமலா ஹாரிஸுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இதேசமயம், உலகின் முதல் பணக்காரரான எலான் மஸ்க் ட்ரம்புக்கு ஆதரவு அளித்து வருகிறார். (ஐ)

# நஸ்ரல்லா இருந்த பதுங்குழியில் ரூ. 14,700 கோடி பணம், தங்கம்!

## இஸ்ரேல் இராணுவம் தெரிவிப்பு

டெல்அவிவ், ஒக். 24

ஹிஸ்புல்லா இயக்கத் தலைவர் ஹசன் நஸ்ரல்லா லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் தங்கியிருந்த பதுங்குகுழியில் 50 கோடி டொலர் - நம் நாட்டு மதிப்பில் 14 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மற்றும் தங்கம் இருக்கின்றன என்று இஸ்ரேல் கூறியுள்ளது.

இஸ்ரேல் இராணுவத்தின் செய்தித் தொடர்பாளர் டானியல் ஹக்காரி இது தொடர்பில் கூறுகையில்,

ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா கொல்லப்பட்டமையை தொடர்ந்து, அந்த அமைப்புக்கு நிதி உதவி அளித்து வரும் அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள்மீது இஸ்ரேல் இராணுவம் தொடர்ந்து குறிவைத்து தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், ஹிஸ்புல்லாவுடன் நெருங்கிய தொடர்புடையை நிதி உதவியளிக்கும் அல்-குவார்ட் அல்-ஹசன் அமைப்புக்கு சொந்தமான பல இடங்களை இஸ்ரேலிய விமானப் படை தாக்கி அழித்து வருகிறது.

தலைநகர் பெய்ரூட்டில் மையத்தில் அமைந்துள்ள அல்-சஹேல் மருத்துவமனையின் கீழே பதுங்குகுழி அமைக்கப்பட்டுள்ளது. இது, ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவராக இருந்த ஹசன் நஸ்ரல்லா தங்கியிருந்த இடமாகும். இங்கு, 50 கோடி டொலர் மதிப்பிலான பணம் மற்றும் தங்கம் பதுக்கி வைக்கப்பட்டுள்ளது என்று கண்டறியப்பட்டுள்ளது. இந்த பணத்தை கொண்டு லெபனானை மீண்டும் மறுகட்டமைப்பு செய்துவிடலாம். அந்த அளவுக்கு அவர்களிடம் பணம் உள்ளது - என்றார். (ஐ)

# பெரு முன்னாள் ஜனாதிபதிக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை

லிமா, ஒக். 24

பெரு நாட்டின் முன்னாள் ஜனாதிபதியான அலெசாண்ட்ரோ டோலிடோவுக்கு ஊழல் குற்றச்சாட்டில் அந்நாட்டு நீதிமன்றம் 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

இந்தத் தீர்ப்பு அந்த நாட்டின் அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தென்னமெரிக்க நாடான பெருவில் அலெசாண்ட்ரோ டோலிடோ (வயது 78) 2001 முதல் 2006 வரை ஜனாதிபதியாக பதவி வகித்திருந்தார்.

அவர் தனது பதவிக்காலத்தில் அயல்நாடான பிரேஸிலுக்கு நெடுஞ்சாலையை அமைத்தார். இந்த நெடுஞ்சாலை அமைக்கும் பணிக்காக ஒடேப்ரெச் என்ற நிறுவனம் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தத்தை அந்த நிறுவனத்துக்கு வழங்குவதற்காக இலங்கை மதிப்பில் 587 கோடி ரூபாய் இலஞ்சமாகப் பெற்றார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

இது தொடர்பில் அந்த நாட்டின் உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் குற்றச்சாட்டு நிரூபணமானது. இதையடுத்து, அவருக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது நீதிமன்றம். (ஐ)

# பெங்களூரில் கட்டடம் இடிந்து ஐவர் பலி!


பெங்களூரு, ஒக். 24

பெங்களூருவில் புதிதாக கட்டப்பட்டுக் கொண்டிருந்த அடுக்குமாடி கட்டிடம் ஒன்று கனமழை காரணமாக இடிந்து விழுந்த விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர்.

நேற்றுமுன்தினம் இந்த விபத்து இடம்பெற்றது. இதில் அக்கட்டிடத்தில் பணிபுரிந்த 20 தொழிலாளர்கள் இடிபாடுகளில் சிக்கிக் கொண்டனர். உடனடியாக தீயணைப்புத் துறை மற்றும் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்ட நிலையில், அங்கு விரைந்து வந்த அதிகாரிகள் மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

10 பேர் பத்திரமாக மீட்கப்பட்டனர். இவர்கள் படுகயமடைந்திருந்ததால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். மேலும், 5 பேர் சடலமாக மீட்கப்பட்டனர். ஏனையோரை மீட்கும் பணி இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்திவாரம் பலவீனமாக இருந்ததே இந்த விபத்துக்கு காரணம் என்று விசாரணையில் தெரியவந்ததாக அதிகாரிகள் கூறுகின்றனர். (ஐ)



# இஸ்ரேல் படைகளின் தாக்குதலில் 70 போராளிகள் பலி!

டெல்அவிவ், ஒக். 24

தெற்கு லெபனானில் இஸ்ரேல் நடத்திய தீவிர தாக்குதலில் ஹிஸ்புல்லா போராளிகள் 70 பேர் உயிரிழந்தனர் என்று கூறப்படுகின்றது.

ஹமாஸ் அமைப்பை அழிக்கும் நோக்கில் காசாமீது இஸ்ரேல் படையெடுத்தது. ஹமாஸுக்கு ஆதரவாக லெபனானின் ஹிஸ்புல்லா போராளிகள் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தின. இதையடுத்து, ஹிஸ்புல்லா போராளிகளின் நிலைகள்மீது இஸ்ரேல் தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளது.

இந்தப் போரால் லெபனானில் சுமார் 12 இலட்சம் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

இந்தநிலையில், நேற்று காலை வரை இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஹிஸ்புல்லா போராளிகள் 70 பேர் கொல்லப்பட்டனர். மேலும், ஏவுகணைகள், டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகள், வெடிமருந்துகள் மற்றும் பிற இராணுவ உபகரணங்கள் கொண்ட களஞ்சியம் ஒன்றும் அழிக்கப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பங்களாதேஷுடனான டெஸ்ட்:

# வெரெய்ன் அதிரடியாக சதம் தென்னாபிரிக்கா 302 ஓட்டம்!

மிர்பூர், ஒக். 24

பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் 308 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தது. இதில், கைல் வெரெய்ன் சதம் விளாசி அசத்தினார்.

மிர்பூர் நகரில் நடைபெற்று வரும் இந்த டெஸ்ட் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப் பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி முதல் இன்னிங்ஸில் 40.1 ஓவரில் 106 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.


அதிகபட்சமாக மஹ்மதுல் ஹசன் ஜாய் 30, தைஜுல் இஸ்லாம் 16, மெஹிதி ஹசன் 13, முஸ்பிகுர் ரஹிம் 11 ஓட்டங்கள் சேர்த்தனர்.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் வியான் முல்டர், காகிசோ ரபாடா, கேசவ் மகாராஜ் ஆகியோர் தலா 3 விக்கெட்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி முதல் நாள் ஆட்டம் முடிவில் 41 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 140 ஓட்டங்கள் எடுத்தது. அணித் தலைவர் எய்டன் மார்க்ரம் 6, டோனி டி ஸோர்ஸி 30, டிரிஸ்டன் ஸ்டப்ஸ் 23, டேவிட் பெலிங்ஹாம் 11, ரியான் ரிக்கெல்டன் 27, மத்தேயு பிரீட்ஸ்கே0 என வெளியேறினர். கைல் வெரெய்ன் 18, வியான் முல்டர் 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இரண்டாவது நாள் ஆட்டத்தை தென்னாபிரிக்க அணி தொடர்ந்து விளையாடியது. தனது முதல் அரைச் சதத்தை கடந்த வியான் முல்டர் 112 பந்துகளில், 8 பௌண்ட்ரிகளுடன் 54 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஹசன் மஹ்மூத் பந்தில் ஆட்டமிழந்தார்.

7ஆவது விக்கெட்டுக்காக வியான் முல்டர் - கைல் வெரெய்ன் ஜோடி 119 ஓட்டங்கள் சேர்த்தது. இதைய டுத்து களமிறங்கிய கேசவ் மகாராஜ் 0, டேன் பயட் 32 ஓட்டங்களில் நடையை கட்டினர்.



தனது 2-வது சதத்தை விளாசிய கைல் வெரெய்ன் 144 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 8 பௌண்ட்ரிகளுடன் 114 ஓட்டங்கள் எடுத்த நிலையில் கடைசி வீரராக மெஹிதி ஹசன் பந்தில் ஸ்ரொம்ப் முறையில் வெளியேற தென்னாபிரிக்க அணி 88.4 ஓவர்களில் 308 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. காகிசோ ரபாடா 2 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

பங்களாதேஷ் சார்பில் பந்துவீசிய தைஜுல் இஸ்லாம் 5 விக்கெட்களை வீழ்த்தினார். ஹசன் மஹ்மூத் 3, மெஹிதி ஹசன் 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

202 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸை விளையாடத் தொடங்கிய பங்களாதேஷ் 2ஆவது நாள் ஆட்டத்தின் முடிவில் 27.1 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 101 ஓட்டங்கள் எடுத்திருந்தது. (ஐ)



# இந்தியாவுக்கு எதிராக விளையாட நான் தயார்!

### டேவிட் வோர்ணர் தெரிவிப்பு

சிட்னி, ஒக். 24

இந்தியாவுக்கு எதிரான போர்டர் கவாஸ்கர் கிண்ண டெஸ்ட் தொடரில் ஓய்வுக்கு விடை கொடுத்து அவுஸ்திரேலிய அணிக்காக தொடக்க ஆட்டக்காரராக களமாட தான் தயார் என்று டேவிட் வோர்ணர் தெரிவித்துள்ளார்.

37 வயதான டேவிட் வோர்ணர், கடந்த ஜூன் மாதம் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார். பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியே அவரின் கடைசி டெஸ்டாக அமைந்தது.

அவரின் ஓய்வை தொடர்ந்து, தொடக்க வீரர் யார் என்பதில் குழப்பம் ஏற்பட்டது. ஸ்ரீவ் ஸ்மித் அவரின் தொடக்க வீரராகக் களமிறங்கிய போதும் கடந்த போட்டிகளில் அவர் சோபித்திருக்கவில்லை.

இந்த நிலையிலேயே, சொந்த மண்ணில் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலிய அணியின் தொடக்க வீரர் யார் என்பதில் மீண்டும் கேள்வி எழுந்தது.

இதற்கு பதிலளிக்கும் விதமாக வோர்ணரின் கருத்து அமைந்துள்ளது. இது தொடர்பில் அவர் கூறுகையில்,

“நான் எப்போதும் தயாராக இருப்பேன். சரியான காரணங்களுக்காக நான் ஓய்வு பெற்றேன். நான் எனது விளையாட்டு வாழ்வை உரிய நேரத்தில் முடித்துள்ளேன். அதே நேரத்தில் அணிக்கு நான் தேவைப்படும்பட்சத்தில் களமாட தயாராக உள்ளேன். அதற்கு தயாராகவும், எனது ஆஸி. அணிக்கு மீண்டும் தொடக்க வீரராக நான் ஆட தயார்” - என்று அவர் கூறியுள்ளார்.

அவுஸ்திரேலிய அணிக்காக கடந்த 2011 முதல் 2024 ஜனவரி வரையில் 112 டெஸ்ட் போட்டிகளில் வோர்ணர் விளையாடி உள்ளார். இதன் மூலம் 8,786 ஓட்டங்களை எடுத்துள்ளார். 26 சதங்கள் பதிவு செய்துள்ளார். இந்திய அணிக்கு எதிராக டெஸ்ட் கிரிக்கெட்டில் 21 போட்டிகளில் விளையாடி, 1,218 ஓட்டங்கள் எடுத்துள்ளார். 4 சதம், 3 அரைச்சதம் இதில் அடங்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இந்தியாவுடனான டெஸ்ட் வில்லியம்சனுக்கு ஓய்வு!

புனே, ஒக். 24

காயத்தில் இருந்து முழுமையாக குணமடையாததால் இந்தியாவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இருந்து நியூசிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர் கேன் வில்லியம்சன் விலகியுள்ளார்.

நியூசிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பெங்களூருவில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து வெற்றி பெற்றது. இதனால் அந்த அணி தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது. 2ஆவது டெஸ்ட் போட்டி இன்று புனேவில் தொடங்குகிறது.

இந்நிலையில், இந்த போட்டியில் இருந்து நியூசிலாந்து அணியின் கேன் வில்லியம்சன் விலகியுள்ளார் என்று அந்த நாட்டு கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இலங்கை அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரின் போது கேன் வில்லியம்சனுக்கு இடுப்பு பகுதியில் காயமடைந்தார். இதில் இருந்து அவர், முழுமையாக குணமடையாததால் புனே டெஸ்ட் போட்டியில் இருந்து விலகியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)





# இங்கிலாந்து அணியிலிருந்து ஜோஸ் பட்லர் திடீர் விலகல்

லண்டன், ஒக். 24

மேற்கு இந்திய தீவுகளுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடரிலிருந்து ஜோஸ் பட்லர் திடீரென விலகியுள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி மேற்கு இந்திய தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் 5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடர்களில் விளையாடவுள்ளது. இதன்படி இவ்விரு அணிகளுக்கும் இடையே முதலில் ஒருநாள் தொடர் வரும் 31ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்த நிலையில் இந்தத் தொடரின் ஒருநாள் போட்டிகளுக்கான இங்கிலாந்து அணியிலிருந்து அணித் தலைவர் ஜோஸ் பட்லர் விலகியுள்ளார். அவருக்குப் பதிலாக புதிய அணித் தலைவராக லிவிங்ஸ்டன் நியமிக்கப்பட்டுள்ளார். பட்லர் ரி - 20 தொடருக்கான அணியில் இடம் பெற்றுள்ளார். (எ)

## ஐ. சி. சியின் சிறந்த அணி அறிவிப்பு

டுபாய், ஒக். 24

உலகக் கிண்ணத் தொடரில் சிறப்பாக செயல்பட்ட வீராங்கனைகளை தெரிவு செய்து சிறந்த அணியை ஐ. சி. சி. அறிவித்துள்ளது.

9ஆவது மகளிர் ரி - 20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் அண்மையில் நிறைவடைந்தது. இதில் தென்னாபிரிக்க அணியை வீழ்த்தி நியூசிலாந்து கிண்ணத்தை கைப்பற்றி அசத்தியது.

இந்த நிலையில் இந்தத் தொடரில் சிறப்பாக செயல்பட்ட வீராங்கனைகளை தெரிவு செய்து சிறந்த அணியை ஐ. சி. சி. அறிவித்துள்ளது.

அந்த அணி விவரம் பின்வருமாறு,

வோல்வார்ட் (தலைவி), தாஸ்மின், மலபா (மூவரும் தென்னாபிரிக்கா), மேகன் ஸ்கட் (அவுஸ்திரேலியா), டேனி வியாட் ஹாட்ஜ் (இங்கிலாந்து), அமெலியா கெர், ரோஸ்மேரி மேய்ர் (இருவரும் நியூசிலாந்து) ஹர்மன்ப்ரீத் கவுர் (இந்தியா), தியான்ரா டோட்டின், எபி பிளெட்சர் (மேற்கு இந்திய தீவுகள்), நிகர் சுல்தானா (பங்களாதேஷ்)

12ஆவது வீராங்கனை: ஈடன் கார்சன் (நியூசிலாந்து).


# ரென்னிஸ் தரவரிசையில் சபலெங்கா மீள முதலிடம்

நியூயோர்க், ஒக். 24

ரென்னிஸ் தரவரிசையில் அரினா சபலெங்கா மீண்டும் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார்.

ரென்னிஸ் வீராங்கனைகளின் புதிய தரவரிசை பட்டியலை சர்வதேச ரென்னிஸ் சங்கம் வெளியிட்டது. இதன் ஒற்றையர் தரவரிசையில் கடந்த ஓராண்டாக முதலிடத்தில் இருந்த போலந்தின் இகா ஸ்வியாடெக்கை (9,665 புள்ளி) 2ஆவது இடத்துக்கு தள்ளி பெலாரஸ் வீராங்கனை அரினா சபலெங்கா (9,706 புள்ளி) மீண்டும் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார்.

இதுகுறித்து தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள சபலெங்கா, “முதலிடம் இந்த முறை எவ்வளவு நாள் என்னிடம் இருக்கிறது என்பதை பார்க்கலாம்” என்று பதிவிட்டுள்ளார். (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறுகம்குடாவுக்கு...

காரணமாக, இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்த நிலையிலேயே, இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில்,

அறுகம் குடாவில் பிரபல சுற்றுலா இடங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தப்படும் என நம்பத்தகுந்த தகவல் கிடைத்துள்ளது. இந்த அச்சுறுத்தலால் ஏற்பட்டுள்ள பெரும் ஆபத்து காரணமாக மறுஅறிவித்தல் வரை அறுகம் குடாவுக்கு செல்வதை அமெரிக்க பிரஜைகள் தவிர்க்க வேண்டும் - என்றுள்ளது.

இந்நிலையில், அதிக மக்கள் கூடும் இடங்களுக்கு செல்வதை தவிர்க்கவும் மிகவும் அவதானத்துடன் இருக்கவும் ரஷ்யர்களுக்கு கொழும்பில் உள்ள ரஷ்ய தூதரகம் விசேட அறிவிப்பு விடுத்துள்ளது.

இதனிடையே, இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் இலங்கைக்கான பயண ஆலோசனையையும் புதுப்பித்துள்ளது. (ஐ)

## இஸ்ரேல்...

இதேவேளை, இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கு செல்வதை இஸ்ரேலியர்கள் பிற்போட வேண்டும். அத்துடன், நீங்கள் இஸ்ரேலியர்கள் என்பதை வெளிப்படுத்துவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் இஸ்ரேல் ரைம்ஸ் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## தேசிய...

இருந்தனர். ஆகவே, எதிர்வரும் 14ஆம் திகதி பாராளுமன்றத்தை சுத் தப்படுத்தும் பெரும் சிரமதானம் நடைபெறவுள்ளது. ஆனால், பாராளுமன் றத்தை சுத்தப்படுத்த முன்னர் தாமாகவே சிலர் சுய சுத்தப்படுத்தலை மேற்கொண்டு 62 பேர் விலகிச் சென்றுள்ளனர்.

இந்தப் பின்ன ணியில் ஏனையவர்களை மக்கள் சுத்தப்படுத்த வேண்டும். இதற்காக திசைகாட்டி சின்னத்தில் போட்டியிடுபவர்களை பாராளுமன்றத்தை மக்கள் நிரப்ப வேண்டும். நேர்மையான - ஊழலற்ற - பணத்துக்காக அங்கும் இங்கும் கட்சி தாவாத - மக்களுக்காக சவாலை ஏற்க தயாரான - புத்திகூர்மையுள்ள நபர்களால் பாராளுமன்றம் நிரப்பப்பட வேண்டும். இதனை தொடர்ந்து நாம் பலமான அரசாங்கத்தை உருவாக்குவோம். பலமான திசைகாட்டியின் அரசாங்கம் உருவாக்கப்பட வேண்டும்.

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் மத்தியில் குரோதம் - எதிர்ப்பு என்பன வியாபித்துள்ளன. இனங்களுக்கு மத்தியில் பிளவை ஏற்படுத்துவதே அரசியலாக இருந்தது. மக்களை பிளவுபடுத்தி இனவாத கட்சிகளுக்கு வாக்குகளை அளிக்க செய்து பின்னர், அவர்கள் அரசாங்கத்துடன் கைகோக்கும் நடைமுறையே காணப்பட்டது. எவரும் இனங்களை ஒன்றிணைக்க முயற்சிக்கவில்லை. ஆனால், தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் ஒருமித்த அரசாங்கத்தை உருவாக்குவதே தேசிய மக்கள் சக்தி அரசாங்கமாகும்.

நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்தி என்னும் குடையின் கீழ் நாட்டு மக்கள் ஒன்றாக அணி திரள வேண்டும். சிங்கள மக்கள் மாத்திரம் அல்லது தமிழ், முஸ்லிம் மக்கள் மாத்திரம் நம்பும் அரசாங்கத்தை உருவாக்குவதால் பலனில்லை - நாட்டை கட்டியழுப்ப முடியாது. மாறாக அனைத்து இன மக்களின் நம்பிக்கையையும் வென்ற அரசாங்கம் உருவாக்கப்பட வேண்டும்.

தேசிய மக்கள் சக்தியின் வெற்றி வடக்கு - கிழக்கில் பெரும் எதிர் பார்ப்பை தோற்றுவித்துள்ளதாகத் தெரிவிகின்றது. பிளவு யுகத்தை விடுத்து ஒற்றுமையின் யுகத்தை உருவாக்குவோம் - என்றார்.

## ஜனநாயக...

வன்னி மாவட்ட வேட்புமனுவை தெரிவத்தாட்சி அலு வலர் ஏற்க வேண்டும் என்று உயர்நீதிமன்றம் நேற்று புதன்கிழமை உத்தரவிட்டது.

வேட்புமனு நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக ஜனநாயக தேசிய கூட்டணி தாக்கல் செய்த மனு நீதியரசர்கள் பிரிதி பத்மன் சூரசேன மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகியோர் கொண்ட ஆயத்தால் நேற்று ஆராயப்பட்டது. இதன்போதே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது , பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திருமதி யுரேஷா டி சில்வா நீதிமன்றத்தில் முன்னிலையாகி, "தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி வேட்புமனுவை ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றம் வழங்கிய அறிவித்தலை தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்றுக்கொள்வதாக தெரிவித்தார். (ஐ)

## நாய்...

அங்கிருந்து யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இந்த நிலையில், அவர் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

இந்த சம்பவத்தில் 21 வயதான சம்பத்குமார என்பவரே உயிரிழந்தவராவார். இளைஞர் மீதான மரண விசாரணைகளை ந. பிறேம்குமார் மேற்கொண்டார். (ஐ -05)

## தரமற்ற...

கொள்வனவு செய்யப்பட்டன. கண் பார்வைக்குரிய மருந்தும் அவற்றில் உள்ளடங்கும். இந்த மருந்து பாவனை காரணமாக 150 பேர் பார்வை இழந்துள்ளனர். பலர் பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனினும், உயிரிழந்தோரின் எண்ணிக்கை குறித்து உரிய கணக் கெடுப்புகள் மேற்கொள்ளப்படவில்லை. இவ்வாறு பாதிப்புற்றோருக்கு அரசாங்கத்தால் எந்தவித நிவாரணமும் வழங்கப்படவில்லை. ஆதலால், நாம் இன்று (நேற்று) குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளோம்.

புதிய அரசாங்கத்தின் மீது எமக்கு நம்பிக்கை உண்டு. இந்த விடயம் தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என நாம் அர சாங்கத்திடம் கோரிக்கை விடுக்கிறோம் - என்றார். (ஐ)

## அரச...

ஒதுக்கப்பட்டது என்பதை உடனடி யாக வெளிப்படுத்த வேண்டும் - என்றும் அவர் கூறியுள்ளார்.

தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் நேற்று புதன்கிழமை நடந்த விசேட கலந்துரையாடலிலேயே முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

கொழும்பு மலர் வீதியிலுள்ள புதிய ஜனநாயக முன்னணியின் பணிமனையில் நடந்த இந்தக் கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "அரசமைப்பின் 43ஆவது சரத்தின் கீழ் அரசு ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்த நாம் தீர்மானம் எடுத்திருந்தோம். அனைத்து அரச ஊழியர்களிடமிருந்தும் பெறப்பட்ட கோரிக்கைகளை பரிசீலித்து சம்பள அதிகரிப்பை வழங்கத் தீர்மானித்திருந்தோம்.

"எனது நண்பர் விஜித ஹேரத் இதற்கு முன்னர் அமைச்சரவையில் இருந்தாரென நான் நினைக்கவில்லை. அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு எமது அரசாங்கம் எடுத்த தீர்மானம் முற்றிலும் சட்டபூர்வமானது. அமைச்சு என்பது ஓர் அமைப்பு. அமைப்புக்கு சட்டங்கள் இல்லை. அரசமைப்பின் 52வது பிரிவின் கீழ் அமைச்சரின் தலைமையில் அமைச்சு உள்ளது. - என்றார்.

# காணாமல் ஆக்கப்பட்டோருக்காக வேலணையில் நேற்று போராட்டம்!

யாழ்ப்பாணம், ஒக். 24

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வேலணையில் நேற்று போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

வங்களாவடி - முருகன் ஆலயம் முன்பாக நேற்று புதன்கிழமை இந்தப் போராட்டம் நடைபெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தீவகத்தில் கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் எங்கே?, ஓ. எம். பி. அலுவலகம் வேண்டாம், இரண்டு இலட்சம் ரூபாய் பணமும் வேண்டாம், முள்ளிவாய் காலில் கையளிக்கப்பட்ட உறவுகள் எங்கே? போன்ற கோஷங்களை எழுப்பியிருந்தனர். (ஐ)

# சோள இறக்குமதியை குறைக்க அறிவுறுத்தல்!

கொழும்பு, ஒக். 24

அடுத்த வருடம் சோள இறக்குமதியை 150,000 மெற்றிக் தொன்னாக குறைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சின் செயலாளர் எம்.பி.என்.எம் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை தற்போது வருடாந்தம் சுமார் 300,000 மெற்றிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்வதாக அவர் குறிப்பிட்டார்.

சோள இறக்குமதி செலவுக்காக ஒதுக்கப்படும் அந்நியச் செலாவணியைக் குறைக்கும் நோக்கில் குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேநேரம், தற்போது சோள உற்பத்தியை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து விதைகளை இறக்குமதி செய்யாமல் உள்நாட்டிலேயே தேவையான விதைகளை உற்பத்தி செய்யும் வேலைத்திட்டமும் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் விவசாய அமைச்சின் செயலாளர் எம்.பி.என்.எம் விக்ரமசிங்க தெரிவித்தார். (அ)

# கசிப்புடன் இருவர் சுழிபுரத்தில் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 24

இரண்டு போத்தல் கசிப்புடன் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வட்டுக்கோட்டை பொலிஸார் நேற்று சுழிபுரத்தில் முன்னெடுத்த சுற்றிவளைப்பு நடவடிக்கையிலேயே இருவரும் கைது செய்யப்பட்டனர். கைதான இருவரிடமிருந்தும் தலா ஒரு போத்தல் கசிப்பு கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் இருவரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-05)

## அமெரிக்க...

இலங்கையர்களின் முக்கிய இடங்களில் ஒன்றான யாழ்ப்பாணத்திலுள்ள வரலாற்று சிறப்புமிக்க கீரிமலை நகுலேஸ்வரம் கோவிலுக்கு முதல் பயணத்தை மேற்கொண்டேன்.

இலங்கையின் பன்முக பாரம்பரியத்துக்கான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கும் வகையில், இது போன்ற கலாசார அடையாளங்களைப் பாதுகாப்பதற்கு ஆதரவளிப்பதில் அமெரிக்கா பெருமிதம் கொள்கிறது.

இந்தப் பயணத்தின்போது, இங்குள்ள மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவர்களின் முன்னேற்றத்துக்கு அமெரிக்கா எவ்வாறு தொடர்ந்து உதவலாம் என்பதை அவதானிக்க ஆவலுடன் காத்திருக்கிறோம்", என்று தனது வடக்கு பயணம் தொடர்பில் ஜூலி சங் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## ஜோன்ஸ்டனுக்கு...

ஹோட்டல் ஒன்றின் வாகனத் தரிப்பிடத்தில் இருந்து சட்டவிரோதமாக நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டு பொருத்தப்பட்ட கார் மீட்கப்பட்டது. அவருக்கு சொந்தமானது என்று கூறப்படும் இந்தக் கார் தொடர்பில் வாக்குமூலம் அளிப்பதற்காக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நேற்று புதன்கிழமை குற்றப் புலனாய்வு பிரிவில் முன்னிலையானார்.

இதன்போது, கைதுசெய்யப்பட்ட ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

இதையடுத்து, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஐ)

# எயிட்ஸ் நோயாளர் அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 24

அநுராதபுரம் மாவட்டத்தில் எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக பாலின நோய் தொடர்பான விசேட மருத்துவர் அஜித் கரவிட்ட தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் அநுராதபுரம் மாவட்டத்தில் மாத்திரம் 17 எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தாயின் மூலம் எய்ட்ஸ் பரவியதாக கூறப்படும் 5 குழந்தைகள் அநுராதபுரம் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்நிலையில், 15 முதல் 24 வயதுக்கு உட்பட்ட இளைஞர் யுவதிகளும், 25 முதல் 49 வயதுக்குட்பட்டவர்களுமே எய்ட்ஸால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## அறுகம்குடாவில்...

அலைச்சறுக்கு விளையாட்டு பிரசித்தமானது. இந்தப் பகுதிகளில் இஸ்ரேலியர்கள் அதிகம் சுற்றித்திரிகின்றனர். அவர்களுக்கு ஏதேனும் ஆபத்து ஏற்படலாம் எனவும் கடந்த சில நாட்களுக்கு முன்னர் தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இதேவேளை, கொழும்பில் அல்லது வேறு எந்த பிரதேசத்திலும் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றமைக்கான புலனாய்வு தகவல்கள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை. மக்கள் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்த வேண்டாம் - என்றும் அவர் கூறினார்.

மேலும், "அறுகம் குடா பகுதியில் இஸ்ரேலியர்கள் நிறுவிய கட்டடம் ஒன்றுள்ளது. இந்தப் பகுதிகள் இஸ்ரேலியர்களை அதிகளவில் ஈர்க்கின்றன. இதனால்தான் அவர்கள் அங்கு இஸ்ரேலியர்களுக்கு ஏதேனும் ஆபத்து ஏற்படலாம் என்று சில தகவல்கள் கிடைத்தன. அதனால்தான் அந்த பகுதிக்கு சாலை தடுப்புகளை வைத்து அவ்வப்போது சோதனை செய்யப்பட்டு வருகின்றது", என்றும் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# சர்வதேச நாணய நிதியத்துடன் மூன்றாம் கட்ட பேச்சு தொடரும்

## மஹிந்த சிறிவர்தன அறிவிப்பு

கொழும்பு, ஒக். 24

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் மறுசீரமைப்பு தொடர்பான வேலைத்திட்டத்தின் மூன்றாவது மீளாய்வு தொடர்பிலான கலந்துரையாடல்களுக்கு இலங்கை அரசாங்கம் தயாராக இருப்பதாக நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்த கூட்டங்களின்போது, நாணய நிதியத்தின் பிரதி நிர்வாகப் பணிப்பாளர் கென்ஜி ஒகாமுராவைச் சந்தித்தது மகிழ்ச்சி அளிக்கிறது.

நுண்பொருளாதார மறுசீரமைப்புக்கான திட்டத்திற்கான அர்ப்பணிப்பை இலங்கை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

மேலும் நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் 3 ஆவது மீளாய்வு தொடர்பிலான கலந்துரையாடல்களை தொடர்ந்து முன்னெடுத்து செல்ல நாங்கள் தயாராக இருக்கிறோம்-என்றார். (அ)

# மின்சாரம் தாக்கி இளம் தாயார் பலி!

கொழும்பு, ஒக். 24

அம்பாந்தோட்டை, லுனுகம்வெஹெர பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மின்சாரம் தாக்கி இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் உயிரிழந்துள்ளதாக லுனுகம்வெஹெர பொலிஸார் தெரிவித்தனர்.

யமுனா சதமாலி ஜயதிலக்க என்ற 28 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த தாயார் தனது வீட்டின் ஜன்னலில் துணியை பொருத்துவதற்காகச் சுவரில் ஆணி அடித்துக் கொண்டிருந்துள்ளார்.

இதன்போது, உயிரிழந்த தாயாரின் இரண்டரை வயது குழந்தை, இரும்பு ஆணி ஒன்றை எடுத்து அருகிலிருந்த மின் இணைப்பில் பொருத்தி விளையாடிக் கொண்டிருந்துள்ளார்.

இதனை அவதானித்த எட்டு வயது குழந்தை, உயிரிழந்த தாயாரிடம் இது தொடர்பில் தெரிவித்துள்ளார்.

பின்னர், இந்த தாயார் உடனடியாக தனது குழந்தைகளை அங்கிருந்து வெளியே அழைத்துச் சென்று, மின் இணைப்பில் பொருத்தப்பட்டுள்ள இரும்பு ஆணியை வெளியே எடுக்க முயன்றபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த தாயாரின் கணவர் கொழும்பில் வேலை செய்து வருவதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

# புதிய கடன்களை அரசு பெறவில்லை

## கூறுகிறார் விஜித ஹேரத்



கொழும்பு, ஒக். 24

வழமையான செயல்பாடுகளுக்கப்பால் வெளிநாடுளிடமிருந்தோ அல்லது வேறு நிறுவனங்களிடமி ருந்தோ அரசாங்கம் கடன் பெறவில்லை என்று அமைச் சரவைப் பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

புதிதாக எந்தவொரு நாட்டிலிருந்தும் நாங்கள் கடன் பெறவில்லை.

திறைசேரிப் பத்திரங்கள் மற்றும் பிணைமுறிகள் காலாவதியாகும்போது புதிதாக பிணைமுறி வெளியிடுவது மத்திய வங்கியில் இடம்பெறும் வழமையான செயற்பாடாகும்.

அதற்கு அப்பால் புதிதாக வேறு எங்கிருந்தும் கடன் பெறவில்லை.

திறைசேரியும் இது தொடர்பில் விளக்கமளித்திருந்தது. பிணை முறிகளுக்கான காலம் முடிவுறும்போது புதிய பிணைமுறி பத்திரங்கள் வெளியிடப்படும்.

இது ஒரு வட்டச் செயற்பாட்டை போன்று எதிர்காலத்திலும் இடம்பெறும் - என்றார். (அ)

# ரவி செனவிரத்னவுக்கு எதிரான குற்றச்சாட்டை விசாரியுங்கள்!

## உதய கம்மன்பில கோரிக்கை



கொழும்பு, ஒக். 24

**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன மீதான குற்றச்சாட்டு உண்மையானதா பொய்யானதா என்பதை அமைச்சர் விஜித ஹேரத் விசாரணை செய்யவேண்டும் என பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில கோரிக்கை விடுத்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பிலான அல்விஸ் விசாரணை அறிக்கையை நிராகரிப்பதாக அரசாங்க பேச்சாளர், அமைச்சர் விஜித ஹேரத் கூறியுள்ளார். எனினும் அதிலுள்ள உண்மைத்தன்மை குறித்து அவர் எந்தவித கருத்தையும் குறிப்பிடவில்லை.

அரச புலனாய்வுப் பிரிவினரால் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்ட கடிதத்தை 12 நாட்களாக மறைத்து வைக்கப்பட்டதற்கான காரணம் என்ன? அதன் பின்னணியில் யார் இருந்தார்கள்?

இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் ஆராய வேண்டும். அதனை விடுத்து மக்களை திசைதிருப்பும் நோக்கில் பேசக்கூடாது.


இந்தக் கேள்விகளுக்கு பதில் கிடைக்குமானால் உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை குண்டுத் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரி யார் என்பதை அறிந்துகொள்ளலாம். தேர்தலை நோக்காக் கொண்டு வீரரைப் போல செயற்படுவதாக பேராயர் மல்கம் ரஞ்சித் கூறியிருந்தார். அதற்கு நான் பதிலளிக்கத் தயாராக இல்லை. நான் மக்களுக்காகவே இயங்கிக்கொண்டிருக்கிறேன்- என்றார். (அ)

# மாட்டைத் திருடி வெட்டி இறைச்சி எடுத்துவிட்டு மிகுதிப் பாகங்களை வீதியில் வீசிய திருடர்கள்!

கிளிநொச்சி, ஒக். 24

திருடிய மாட்டின் இறைச்சியை எடுத்துவிட்டு மாட்டின் பாகங்களை கிணறு மற்றும் பொது இடங்களில் வீசிய சம்பவம் கிளிநொச்சி பரந்தன் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பரந்தன் - முல்லை வீதியில் உள்ள 11 ஆம் ஒழுங்கையில் உள்ள வீட்டில் கட்டி வைக்கப்பட்டிருந்த பசு மாட்டை திருடர்கள் சுமார் 500 மீற்றர் துரத்துக்கு கடத்திச் சென்றுள்ளனர். கடத்திய மாட்டை பரந்தன் - முல்லை வீதி அருகில், இறைச்சிக்காக வெட்டிவிட்டு கழிவுகளை கிணறு மற்றும் பொது இடங்களில் வீசி சென்றுள்ளார்கள்



இவ் விடயம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# பொதுநலவாய அரச தலைவர்களின் மாநாட்டில் அநுர பங்கேற்கமாட்டார்!

கொழும்பு, ஒக். 24

தென்பசுபிக் பிராந்திய நாடான சமோவாவில் நடைபெறவுள்ள பொதுநலவாய அமைப்பின் அரச தலைவர்கள் மாநாட்டில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பங்கேற்கமாட்டார்.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தும் மாநாட்டுக்கு செல்ல மாட்டார். எனினும், வெளிவிவகார அமைச்சு மற்றும் பிரிட்டனில் உள்ள இலங்கை தூதரக அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று மாநாட்டில், இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்கவுள்ளது.

இன்று முதல் எதிர்வரும் 26ஆம் திகதி வரை பொதுநலவாய மாநாடு நடைபெறவுள்ளது. இதில் பிரிட்டிஷ் மன்னர் பங்கேற்கின்றார். அவர் மாநாட்டுக்கு தலைமை வகிப்பார்.

பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் அரச தலைவர்கள் அல்லது வெளிவிவகார அமைச்சர்கள் பங்கேற்பது வழமை.

பொதுநலவாய அமைப்பு தொடர்பில் முன்னர், ஜே.வி.பியாக இருந்த காலகட்டத்தில் தேசிய மக்கள் சக்தி கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சட்டவிரோதமாக சேர்த்த சொத்துகளை பறிமுதல் செய்வதற்கு புதிய நிறுவனம்!

## அநுரவின் அரசு புதிய திட்டம்

கொழும்பு, ஒக். 24

அரசியல்வாதிகள், அதிகாரிகள் அல்லது பிற தனிநபர்கள் முறைகேடாகச் சம்பாதித்த சொத்துக்கள் மற்றும் பணத்தை பறிமுதல் செய்வதற்கு புதிய அரச நிறுவனமொன்றை உருவாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அந்த நிறுவத்தை சொத்து மீட்பு நிறுவனம் அரசாங்கம் அடையாளப்படுத்த உள்ளது. உலகின் பல வளர்ந்த நாடுகளில் இவ்வாறான நிறுவனங்கள் செயல்படுகின்றன. அதனை ஒத்ததாகவே இந்த நிறுவனமும் இருக்கும்.

வெளிநாட்டில் அல்லது நாட்டுக்குள் உள்ள பணமோசடி மற்றும் பிற வழிகளில் பெறப்பட்ட முறைகேடான ஆதாயங்கள் அல்லது பணத்தைக் கண்டறிந்து அவற்றை மீட்பதற்கான சட்டத்தை நடைமுறைப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுப்பது இந்த நிறுவனத்தின் பணியாக இருக்கும்.

அரசாங்கத்துக்கு கிடைத்துள்ள சட்டவிரோத கறுப்புப் பணத்தை வைத்திருப்பவர்கள் தொடர்பான தகவல்களின் அடிப்படையில் பல இரகசிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரச உயர்மட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ஊழல் மற்றும் மோசடிகளின் ஊடாக சேர்க்கப்பட்ட சட்டவிரோத சொத்துகள் மீட்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்திருந்தார்.

அதன் பிரகாரம் அவர் தற்போது பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதுடன், ஊழல் - மோசடியில் ஈடுபட்ட அமைச்சர்கள், அரச அதிகாரிகளுக்கு எதிராக நிலுவையில் உள்ள வழக்குகளை துரிதமாக விசாரிக்கும் உத்தரவுகளையும் பிறப்பித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.10.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.